மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 11 / நவம்பர் 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-




விடுதலைக்கு விதையான மாவீரர்களுக்கு

# வீரவணக்கம்



தலித்தியம் என்றால் என்ன?



தமிழினத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கு தமிழ்த்தேசியமே மாற்றுத் திட்டம்

- வட அமெரிக்காவில் பெ. மணியரசன் உரை




ராஜலெட்சுமியின் மனக்குரல் எழுப்பும் வினா?




# வீரவணக்கம்

**இனவிடுதலைக்காக
விதையான வீரவேங்கைகளுக்கு
முற்றம் மாதஇதழ்
வீரவணக்கம் செலுத்துகிறது**

வீரவேங்கைகள்
www.veeravengaikal.com

எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டு உயர்ந்துநிற்கிறார்கள்.

**- தேசியத் தலைவர் -**



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly November 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

இராஜபக்சே பிரதமராயிருப்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் பேராபத்து!
– தலையங்கம்.......... 4

தமிழினத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கு தமிழ்த்தேசியமே மாற்றுத் திட்டம்
– வட அமெரிக்காவில் தோழர் பெ. மணியரசன் உரை .......... 6

வலியில்லா அறுவைச் சிகிச்சைக்கு வித்திட்டவர் மார்ட்டின்
– டாக்டர் ஜெ. எட்வர்ட் ஜான்சன்.......... 9

பசுமைச்சாலை திட்டத்துக்கு எதிராக அறவழியில் போடுபவர்களை கைது செய்யக் கூடாது – ஐகோர்ட்டு உத்தரவு.......... 11

நான் யார்? சிறுமி ராஜலெட்சுமியின் மனக்குரல் எழுப்பும் வினா?
– எவிடன்ஸ் கதிர் ..........13

வேதங்கள் புனிதமானவை, உயர்ந்தவை என்பது பொய், பித்தலாட்டம் புனைவு
– எழுத்தாளர் சாரு நிவேதிதா ..........16

சிறைச்சாலை நினைவுகள்
–சாம்பிரியக்குமார் ..........20

தலித்தியம் என்றால் என்ன?
–இரா.ஜவகர்.......... 22

திராவிடம்: மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியாதா?
– பெ. மணியரசன் ..........25

நாமக்கல் கவிஞர்
–பேராசிரியர் க. சுபத்திரா.......... 28

சாதி?
–அ. பிரான்சிஸ் .......... 30

வெஃகாமை (திருக்குறள்)
–பீம பெருமாள்.......... 32

வந்தபின் திகைப்பது சரியா?
– தி. ஒய்ஸ்லின் சாமுவேல் ..........33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# இராஜபக்சே பிரதமராயிருப்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் பேராபத்து!



இலங்கையில் ராஜபக்சே பிரதமராகி இருப்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்திய வுக்கு பேராபத்தான தானகும். இதனால் இந்தியா இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இலங்கையில் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கே சில நாட்களுக்கு முன்பு தில்லிக்கு வந்து இந்திய அரசுடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பியவுடன் அவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு பிரதமராக இராஜபக்சேயை இலங்கை குடியரசுத் தலைவர் சிறீ சேனா நியமித்திருக்கிறார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, சிங்கள அரசியல் தலைவர்களுக்குள் எவ்வளவு பகை இருந்தாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படுவதில் ஒன்றுசேர்ந்துகொள்வார்கள் என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. இராசபக்சே மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருப்பது ஈழத் தமிழர்களுக்கு எதிரானது என்பது மட்டுமல்ல, இந்திய அரசுக்கும் எதிரானதுதான். இலங்கை அரசியல் குழப்பத்தில் சீனா மீண்டும் வெற்றி பெற்றுவிட்டது.

இந்தியாவின் அணுகுமுறை தோல்வியை சந்தித்துள்ளது என்பது உண்மை.. இதை இலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றமாக மட்டும் பார்க்க முடியாது. இந்திய அரசியலில் குறிப்பாக தமிழ் மக்களின் நலனில் இது பாதிப்பை ஏற்படுத்தும்.

இனப்படுகொலை நிகழ்த்திய ராஜபக்சே இலங்கையின் பிரதமராக பொறுப்பேற்றிருப்பது பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நீதி போராட்டத்திற்கு மிகப் பெரும் முட்டுக்கட்டையாக அமையும் என்பது நிதர்சனம்.

இலங்கையின் அரசியல் அரங்கம் மாறுபட்ட காட்சிகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதிபர் திடீரென்று ராசபக்சேவை பிரதமராக்கியுள்ளார். இங்கிருந்து சு சாமி வாழ்த்து தெரிவித் திருக்கிறார். ரணில், நான் போகமாட்டேன். நான்தான் பிரதமர் என்கிறார். இரண்டு பிரதமர்களுமே ஈழத்தமிழர்களுக்கு இடும்பு

செய்பவர்கள்தான், செய்தவர்கள்தான். இவர்களுக்குள்ளான மாற்றம் எந்த ஒரு தீர்வையும் தமிழர்களுக்குத் தந்துவிடாது.

தமிழர்களுக்கு எதிராக பல நாடுகள் சேர்ந்து செயல்பட்டன. ஐநாவும் கைகோர்த்தது. ஆயிரக் கணக்கில் தமிழ் உயிர்களை அழித்தனர். குற்றமற்ற எத்தனையோ பேர்களின் குருதி நிலத்தை நனைத்தது. உயிருக்கு நிகரான அந்த இரத்தம் நிச்சயமாக பழி தீர்க்கும். அந்த நாளை அறம் சார்ந்த மனம் கொண்டோர் காண்பார்கள். தீதும் நன்றம் பிறர்தர வாரா என்று தமிழ் முன்னோர் சொன்னது நடக்காமல் போய்விடாது.

மாவீரர்கள் கல்லறைகளைக்கூட இடித்து தரைமட்டமாக்கிய வெறிபிடித்த சிங்களனுக்கு முடிவு வராமல் போகாது. இறந்தோரின் எலும்புகளும் நரம்புகளும் ஒன்றுகூடி எழுந்து வந்து நம்மை கொன்றுவிடுமோ என்று அச்சப்பட்டுத்தான் மாவீரர் துயிலுமிடத்தையும் தரைமட்டமாக்கி விட்டனர். தமிழன் குருதி தோய்ந்த மண்ணும் நீதி கேட்கும் என்பது சிங்களருக்கு எங்கே தெரியப்போகிறது.

தமிழீழ விடுதலையின் பொருட்டு மாவீரர்களான ஒவ்வொரு தமிழரின் வரலாறும் தமிழன் இருக்கும் வரை இருக்கும். வரும் சந்ததிகளை அது வீரமுள்ளவர்களாக உருவாக்கிக் கொண்டே இருக்கும். மாவீரர்கள் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மேதகு தலைவரின் கூற்று உண்மையாகும். விதை என்றாவது திரும்பவும் முளைக்கும் மிகப்பெரிய மரமுமாகும். தமிழர்களுக்கு விடுதலை பெற்றுத்தரும், தமிழர்களைக் காக்கும்.

இலங்கையின் பிரதமர் பொறுப்பை ஏற்றுள்ள ராஜபக்சேவால் தமிழர்களுக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும். சுப்பிரமணிய சுவாமி இலங்கைச்சென்றதே இதற்கு சாட்சி!

இந்தியாவின் பக்கம் வாலையும், சீனாவின் பக்கம் தலையையும் காட்டுவார். தொட்டிலையும் ஆட்டி விட்டு புள்ளையையும் கிள்ளிவிடும் சூத்திரதாரி ராஜபக்சே இதனால் இந்தியாவிற்குதான் பேராபத்து!

●

## சீனா கைக்கு சென்ற இலங்கை, இந்தியா கைக்கு வந்த மாலத்தீவு பாதிப்பு யாருக்கு?

இலங்கையில் மாறி இருக்கும் அரசியல் சூழலில் அடுத்து என்ன நடக்கவிருக்கிறது என்பதை உலகமே உற்று நோக்கி கவனித்து வருகிறது.

கடந்த 2015ஆம் ஆண்டில் அதிபர் பதவிக்கு மூன்றாவது முறையாக போட்டியிட்ட மஹிந்த ராஜபக்சே தோல்வியைத் தழுவினார். அதிபராக ஒருவர் இரண்டு முறை மட்டுமே இலங்கையில் போட்டியிட முடியும். ஆனால், சட்டத்தை மாற்றி மூன்றாவது முறையும் ராஜபக்சே போட்டியிட்டார். இவரை எதிர்த்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி என்ற பெயரில் அதிபர் சிறிசேனாவின் இலங்கை சுதந்திரக் கட்சியும், ரணில் விக்ரமசிங்கேவின் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைந்தன. அதிபராக சிறிசேனா, பிரதமராக ரணில் பதவியேற்றனர். கடந்த ஆட்சியில் ராஜபக்சே ஆட்சியில் அமைச்சராக இருந்தவர்தான் சிறிசேனா. அவரிடம் இருந்து வெளியேறி தனிக்கட்சி அமைத்து அதிபரானார்.

ராஜபக்சே எப்போதும் சீனாவுக்கு துணை நிற்பவர். ஆனால். ரணில் நடுநிலை வகித்து வந்தார். பிரதமராக ராஜபக்சே பதவியேற்றவுடன் சீன அதிபர் ஜின் பிங் வாழ்த்து தெரிவித்தார்.

இந்த ஆட்சி மாற்றம் தமிழக மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். தமிழக முகாம்களில் அடைக்கலம் ஆகி இருக்கும் இலங்கை வாழ் தமிழர்கள் தங்களது சொந்த மண்ணுக்கு என்றாவது ஒரு நாள் செல்ல மாட்டோமா என்ற ஏக்கத்துடன் இருந்தனர். அதற்கும் தற்போதும் பாதகம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை இந்தியா உறவில் மாற்றம் கண்டிப்பாக ஏற்பட உள்ளது என்பது அரசியல் நோக்கர்களின் கருத்தாக உள்ளது. கடந்த ஆட்சியிலும் சீன பக்கமே தனது உறவை ராஜபக்சே வளர்த்துக் கொண்டு வந்துள்ளார். தென்கிழக்கு ஆசிய நாட்டில் பொருளாதாரத்தில் பலம் வாய்ந்த சீனா எப்போது இலங்கையை தனது கைக்குள் வைத்துக் கொள்ளவே விரும்பும். இலங்கைக்கும் வெளிநாட்டு முதலீடுகள் தேவைப்படுகிறது. சீனாவின் முதலீடுகளை ஈர்க்கவே ராஜபக்சே விரும்புவார். ரணில் விக்ரமசிங்கே போல் இந்தியா, சீனா என இரண்டு நாடுகளுடனும் ஒரே மாதிரியான உறவுகளை ராஜபக்சே வைத்துக் கொள்ளமாட்டார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் ஹம்பன்தோட்டா துறைமுகம் திறக்கப்பட்டது. இந்த துறைமுகத்துக்கு ராஜபக்சே பெயர் வைக்கப்பட்டது. இந்த துறைமுகம் அமைக்க 361 மில்லியன் டாலர் செலவிடப்பட்டது. இதில் 85 சதவீதப் பணத்தை சீனாவின் வங்கிதான் கொடுத்தது. இந்தக் கடனை அடைக்க முடியாமல் இறுதியில் இதன் பொறுப்பை சீனாவிடம் இலங்கை ஒப்படைத்தது. மீண்டும் இதுபோன்ற கடன்களை தூக்கி எறிந்து, முதலீடுகள் அளித்து இலங்கையை தங்களது கைக்குள் வைத்துக் கொள்ளவே சீனா விரும்பும்.

கடந்த மாதம் நடந்த மாலத்தீவு தேர்தலில் இந்தியாவுக்கு ஆதரவான மாலத்தீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் முகமது நஷீத் வெற்றி பெற்று அதிபரானார். குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடித்த மாலத்தீவு முன்னேற்றக் கட்சித் தலைவரும் அதிபராகவும் இருந்த அப்துல்லா யாமீன் தோல்வியைத் தழுவினார். அப்துல்லா முழுக்க முழுக்க சீனாவுக்கு ஆதரவாக செயல்பட்டார். மாலத்தீவு தனது கையை விட்டுப் போனதை பொறுத்துக் கொள்ள முடியாத சீனா தற்போது இலங்கையில் அரசியல் குழப்பம் செய்து, தனது கட்டுப்பாட்டுக்குள் அந்த நாட்டை கொண்டு வந்துள்ளது.

●



# "தமிழினத்தின் இன்றைய நெருக்கடிகளுக்கு தமிழ்த்தேசியமே மாற்றுத் திட்டம்!"

## வட அமெரிக்காவில் தோழர் பெ. மணியரசன் உரைவீச்சு!

"வட அமெரிக்கத் தமிழர்கள்" அமைப்பின் சார்பில் வட அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் ஒருங்கிணைக்கப்படும் "தழைக்கட்டும் தமிழ்த்தேசியம்" தலைப்பிலான தொடர் கூட்டங்களில் பங்கேற்பதற்காகவும், வட அமெரிக்காவில் செயல்பட்டு வரும் "இலங்கை தமிழ்ச் சங்கத்தின்" 41ஆவது ஆண்டுவிழாவில் பங்கேற்பதற்காகவும் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் அவர்கள் வட அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ளார். வாசிங்டன், செயின்ட் லூயிஸ், மின்னாபோலிஸ், நேவார்க், சைரக்கஸ், நியூஜெர்சி, வட கரோலினா, அட்லாண்டா, சியாட்டில், டல்லஸ் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அவர் உரையாற்றுகிறார்.

2018 அக்டோபர் 22 அன்று நள்ளிரவு, சென்னை மீனம்பாக்கம் அனைத்துலக விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட தோழர் பெ. மணியரசன் அவர்களை, பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தலைமைச் செயற்குழு தோழர்கள் ம. இலட்சுமி, க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் வெற்றித்தமிழன், சென்னை விமான நிலையப் ப்ரீபெய்டு டாக்சி ஓட்டுநர்கள் சங்கப் பொதுச் செயலாளர் தோழர் மா.வே. சுகுமார், தோழர்கள் வி. கோவேந்தன், மு. பொன்மணிகண்டன், இராகுல்பாபு உள்ளிட்டோர் வழியனுப்பி வைத்தனர்.

அக்டோபர் 26ஆம் நாள், வட அமெரிக்காவின் மிசோரி - செயிண்ட் லூயிஸ் பால்வின் பாயிண்ட் அரங்கில் "தழைக்கட்டும் தமிழ்த்தேசியம்" - தொடர் கூட்டங்களின் முதல் நிகழ்வாக, "பறிபோகும் தமிழர் தாயகம்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

திரு. வீரபாண்டியன் நிகழ்வை ஒருங்கிணைத்தார். நிகழ்வின் தொடக்கமாக, ஐயா பெ. மணியரசன் அவர்கள் குறித்த குறும்படம் ஒளிபரப்பானது. இதனையடுத்து, ஐயா பெ. மணியரசன் கருத்துரையாற்றினார். அவர் பேசியதன் சுருக்கம் :

"வட அமெரிக்கத் தமிழ் மக்களோடு கலந்துரையாடும் வகையில், எனக்கு இக்கூட்டங்களில் பங்கெடுக்க வாய்ப்பை வழங்கிய உங்கள் அனைவருக்கும் தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட அமெரிக்காவின் இந்த பால்வின் நகரத்தில் - இந்த குளிர்காலத்தையும் பொருட்படுத்தாமல் திரண்டிருக்கும் தமிழ் உள்ளங்களுக்கு எனது வாழ்த்துகள்!

கடந்த காலங்களைவிட தமிழின உணர்வு, தமிழின உரிமை உணர்ச்சி தமிழ்நாட்டிலும் அதிகமாகியுள்ளது; தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அதிகமாகியுள்ளது.

புலத்தில், இந்த உரிமை உணர்வு இன்னும் கூடுதலாக இருக்கிறது என்றும் சொல்லலாம். அதற்குக் காரணம், நம் தமிழரிடையே உள்ள தாயகப் பற்று, தாய்மொழிப் பற்று, உரிமை குறித்த கூடுதலான அக்கறை ஒருபக்கம்; அதுவும், அயல் நாட்டில் வாழும் போது, அவர்கள் தங்கள் இனப்பெருமிதங்களையும், தங்கள் மொழிப் பெருமைகளையும் கூறும்போது, நம் மனம் நம் தாயகத்தின் பெருமிதங்களைத் நாடிச் செல்லும்! நம் தாய்மொழியின் மீதும், தமிழர் தாயகத்தின் மீதும் கூடுதல் அக்கறை செலுத்த உளவியல் வழி ஏற்படுத்தும்!

இன்றைக்கு, தமிழ்நாட்டு மக்கள் கடந்த காலங்களைவிட அதிகளவு விழிப்புணர்வு பெற்றுள்ளனர். ஆட்டு மந்தை, மாட்டு மந்தை போல கட்சிகள் - நம் மக்களை ஓட்டு மந்தையாகக் கருதிய காலம் கடந்துவிட்டது. கட்சிகளைத் தாண்டி, உயிர் துடிப்புள்ள போராட்டங்

களை தமிழ்நாட்டு மக்கள் அங்கே நடத்திக் கொண் டுள்ளனர்.

தமிழர்களின் பண்பாட்டு உரிமையான ஏறுதழுவல் உரிமை பறிக்கப்பட்டபோது, தமிழ்நாட்டின் மிகப் பெரும் கட்சிகளாக விளங்கும் தி.மு.க. - அ.தி.மு.க. கட்சிகளின் தலைவர்களால் அதை மீட்டுக் கொடுக்க முடியவில்லை. அவர்களது முயற்சிகள் எந்தப் பலனையும் அளிக்கவில்லை. இந்திய அரசும், உச்ச நீதிமன்றமும் அவர்களது குரலுக்கு செவி சாய்க்கவில்லை!

ஆனால், இளைஞர்கள் ஆண்களும் பெண்களும் சல்லிக்கட்டு சட்டம் வந்தால்தான் களைவோம் என்ற உறுதியோடு, சென்னை கடற்கரையில் இலட்சக் கணக் கில் கூடினார்கள். தமிழ்நாடெங்கும் பல்லாயிரக் கணக் கில் கூடினார்கள். சல்லிக்கட்டு விளையாட்டு நடை பெறாத கோவையில்கூட பல்லாயிரக்கணக்கில் கூடி னார்கள். அவர்களை இணைத்தது தமிழின உணர்ச்சி!

ஏறுதழுவல் எழுச்சியை, எந்தக் கட்சியும் பின்னணி யிலிருந்து நடத்தவில்லை! தன்னெழுச்சியாக அது நடந் தது. காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்த தமிழினத்தின் எழுச்சியாக அது அமைந்தது. கட்சிகள், பின்னால் வந்து இதை ஆதரித்தன.

காவிரிப்படுகையின் நெடுவாசலில் - கதிராமங் கலத்தில் ஓ.என்.ஜி.சி.க்கு எதிரான போராட்டம் அப்படித் தான் தன்னெழுச்சியாக நடக்கிறது. அதை, பிற கட்சிகள் பின்னால் வந்து ஆதரிக்கும் நிலை உருவாகியுள்ளது. கதிராமங்கலத்திற்கு நாங்கள் போனபோது, எங்களைக் காவல்துறையினர் கைது செய்தார்கள்.

அப்படித்தான் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து தூத்துக்குடியில், எந்தக் கட்சிப் பின்னணியும் இல்லாமல், மக்கள் ஆண்களும், பெண்களுமாக ஐம்பதாயிரம் பேர் தன்னெழுச்சியாக ஒன்றுகூடிப் போராடினார்கள். துப்பாக்கிச்சூடு நடைபெற்று, 13 மனித உயிர்களை பலி வாங்கியது தமிழ்நாடு அரசு! துப்பாக்கிச் சூடு நடந்த மறுநாளே மே 23 அன்று, நாங்கள் தூத்துக்குடி சென்றோம்.

துப்பாக்கிச் சூட்டில் இறந்த மாணவி ஸ்னோலின் வீட்டிற்குச் சென்றோம். ஸ்னோலினின் அம்மா, பெரியம்மா போன்றோர் கதறிக் கொண்டு, ஓய்வின்றி அழுது கொண்டிருந்தனர். தமிழ்நாடே உங்கள் மகளுக் காக அழுது கொண்டிருக்கிறது என்றுகூறி அவரை நாங்கள் தேற்ற முயன்றோம். முடியவில்லை! அந்த சூழலிலும்கூட, ஆலையை நிரந்தரமாக மூடாமல் எங்கள் பாசமிகுப் பிள்ளையின் உடலைப் பெற்றுக் கொள்ள மாட்டோம் என ஸ்னோலின் குடும்பத்தினர் மறுத்து விட்டனர். அந்த வீர உணர்ச்சிதான், தமிழ்நாட்டில் இன்றைக்குள்ள மாற்றம்!

கட்சிகளால் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முடியவில்லை என்பதை உணர்ந்து, மக்கள் தாங்களாகவே களத்தில் இறங்கிப் போராடும் நிலையில் தமிழ்நாடு உள்ளது. 2009ஆம் ஆண்டு, தமிழீழ இன அழிப்புப் போருக் குப் பிறகு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட மாற்றம் இது!

பழைய காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனிகள் நம் மண்ணை சூறையாடியதைப் போல், இன்றைக்கு வடக் கிந்தியக் கம்பெனிகள் வேட்டையாடிக் கொண்டிருக் கின்றன. மண்ணை மீட்கப் போராடிய வேலு நாச்சியார், புலித்தேவன், மருது சகோதரர்களை எப்படி அழித் தார்களோ, அதைப் போல போராடும் தமிழ் மக்களை காவல்துறை கொண்டு ஒடுக்குகிறார்கள். நம் காவல் துறையே அவர்களுக்கு இராபர்ட் கிளைவ் போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தில்லியில் “சனநாயக” முறைப்படி அமைக்கப்பட்ட “வைசிராய்”களை வைத்து, நம்மை ஒடுக்குகிறார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியைவிட மோசமாக வடக்கிந்தியக் கம்பெனிகளால் - இந்திய அரசால் தமிழ்நாடு சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்போது ஐட்ரோகார்பன் எடுப்பதற்காக தமிழ் நாட்டின் காவிரிப்படுகையையும், கடற்கரையையும் ஏலம் விட்டுவிட்டார்கள். பல்லாயிரக்கணக்கான சதுர கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியை 3 வட்டாரங்களாகப் பிரித்து, அதில் இரண்டை ஸ்டெர்லைட் “வேதாந்தா”வுக்கும், இன்னொன்றை ஓ.என்.ஜி.சி.க்கும் கொடுத்திருக்கிறார்கள்.

“இனிப்பு கடை” என்றால் எல்லா வகை இனிப்பு களும் இருப்பதுபோல், “ஐட்ரோ கார்பன்” என்று பொதுப் பெயர் வைத்து எல்லாவற்றையும் எடுக்கிறார்கள். மீத்தேன் என்றால் எதிர்ப்பு வரும் என்பதால், “ஐட்ரோ கார்பன்” என்ற பொதுப் பெயர் வைக்கப்பட்டு, பெட்ரோலியம் - மீத்தேன் என அவர்கள் எதை வேண் டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் போட்டுள்ளார்கள். நம்முடைய பாசன நிலங்கள் பாழ்பட்டுப் போகும் நிலை வரப்போகிறது!

இந்திய அரசமைப்புச் சட்டப்படி “நிலம்” என்பது மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆனால், அதைப் பற்றியெல்லாம் இந்திய அரசு கவலை கொண்டதாகவே தெரிகிறது. அதைத் தட்டிக் கேட்கும் துணிவு தமிழ்நாடு அரசுக்கும் இல்லை!

இவற்றையெல்லாம் எதிர்த்துக் கூடுவதையே சட்ட விரோதம் என்கிறது தமிழ்நாடு அரசு! எட்டுவழிச் சாலைத் திட்டத்தால் பக்கத்து வீடு பாதிக்கப்பட்டால், நாம் அவர்களுக்கு ஆதரவாக நின்றால் கூட நம்மை “வெளியாள்” என்று தனிப்பிரித்து, கைது செய்கிறது தமிழ் நாடு காவல்துறை! பக்கத்து வீட்டுக்காரனுக்கு நாங்கள் “வெளியாள்” என்றால், எங்கள் மண்ணில் வந்து கால் பதிக்கும் நீங்கள் யார்? காவல்துறை யார்? வேதாந்தா யார்? இந்திய அரசு யார்?

இப்படி நம் மண்ணில் நாசகரத் திட்டங்கள் வந்து கொண்டுள்ள நிலையில், தமிழர் தாயகமே வெளி மாநிலத்தவரால் பறிபோய்க் கொண்டுள்ளது. தமிழ் நாட்டின் எல்லா இடங்களிலும் வெளியார் குவிந்து கிடக் கிறார்கள். தேங்காய் பறிப்பிலிருந்து வயல்வெளி வேலைகள் தொடங்கி, அனைத்து வேலைகளிலும் வெளி மாநிலத்தவர்தான் இருக்கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள இந்திய அரசு நிறுவனங்களிலும் இதுதான் நிலைமை!

இந்தியாவின் பிற மாநிலங்களில் இவ்வாறான நிலை இல்லை. மண்ணின் மக்களுக்கே வேலை என அங்கெல்



லாம் தனிச் சட்டங்கள் இயற்சி வைத்துள்ளனர். வட கிழக்கு மாநிலங்களுக்குச் செல்ல விசாவுக்கு நிகராக - உள் அனுமதிச் சீட்டுமுறை வைத்துள்ளார்கள். ஆனால், தமிழ்நாட்டில் என்ன சட்டம் இருக்கிறது தெரியுமா?

கடந்த 2016 செப்டம்பரில் அன்றைய முதலமைச்சர் செயலலிதா இருந்தபோது, நிதியமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் ஒரு சட்டத்தை முன்மொழிந்தார். தமிழ்நாடு அரசின் பணிகளுக்கு இந்தியாவின் எந்த மாநிலத்தவரும் வரலாம், பிற மாநிலத்தவர் மட்டுமின்றி பாக்கித்தான், நேப்பாளம், டான்சானியா போன்ற பிற நாட்டவரும் வரலாம் என்றொரு சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

இப்படி அயலாரை கணக்கில்லாமல் விட்டதால் தான், அசாமிலும், திரிபுராவிலும் மண்ணின் மக்கள் சிறுபான் மையினராகிவிட்டார்கள். அதற்காகத்தான், இப்போது அசாமில் மண்ணின் மக்கள் யார், வெளியார் யார் என்பதற்கான "குடிமக்கள் கணக்கெடுப்பு" நடத்தப் பட்டு, அதில் 40 இலட்சம் பேர் அயலார் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அசாமின் பா.ச.க. முதல்வர் அந்த 40 இலட்சம் பேருக்கு எவ்வித உரிமைகளையும் வழங்க முடியாது, ரேசன் உள்ளிட்ட உயிர் வாழ்வதற்கான தேவைகளை மட்டும்தான் செய்ய முடியும் என்கிறார்.

ஆனால், தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட அரசியல் உண்டா? தி.மு.க. - அ.தி.மு.க.வில் இப்படிப் பேசும் தலைவர்கள் உண்டா? அடைந்தால் திராவிட நாடு என்று பேசியவர்கள், ஏன் மண்ணின் மக்களுக்கு வேலை என்று சட்டம் இயற்றி, அதை உறுதி செய்யவில்லை?

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு, தனிநபர் பகை அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் இதே காலகட்டத்தில்தான், தமிழ் நாட்டின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிபோய்க் கொண்டே இருக்கின்றன.

தமிழ் மக்களின் உளவியல், தற்சார்பு உணர்வு, தன்மான உணர்வு ஆகியவை இக்கட்சிகளால் சீரழிக்கப் பட்டுள்ளன. அதனால்தான், நம் மக்கள் ஆங்கில மோகத் திலும், இந்தி மோத்திலும் வீழ்ந்து கிடக்கிறார்கள். இன் றைக்கு, தமிழ்நாட்டில் தமிழ்வழிப் பள்ளிகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு, பல பள்ளிகள் மூடப் பட்டுவிட்டன. வீதிக்கு வீதி புதிதாக - இந்திய அரசின் நடுவண் கல்வி வாரியப் (சி.பி.எஸ்.இ.) பள்ளிக் கூடங்கள் திறக்கப்படுகின்றன. இங்கே வட அமெரிக்காவில் அப்படி செய்ய முடியுமா?

அமெரிக்காவில் இங்குள்ள மாகாணப் பாடத் திட்டத்தை மீறி நாம் ஏதாவது செய்திட முடியுமா? பெரிய ஏகாதிபத்தியமாக விளங்கினாலும், இப்படி கீழே அதிகாரத்தைக் கொடுத்து வைத்திருக்கிறார்கள் அல்லவா? இதைத்தான் நாம் கேட்கிறோம்!

உலகத்திலேயே கூட்டாட்சி குறித்து சிறப்பாகப் பேசப்பட்ட நாடு அமெரிக்காதான்! அமெரிக்க ஐக்கிய நாட்டை உருவாக்கும்போது ஹாமில்டன், பெஞ்சமின் பிராங்களின், தாமஸ் ஜெபர்சன் போன்ற அறிஞர்கள் அங்கிருந்தனர். ஒரு தேசிய இனம் தனக்கான சொந்த அரசு அமைத்துக் கொள்ளும் தன்னுரிமை (Right to Self Determination) என்பதைக் கொள்கையளவில் முதன் முதலாக இங்குதான் பேசினார்கள். பல அறிவாளர்கள் இங்கே இருந்தனர்.

"அமெரிக்க ஐக்கிய நாடுகள்" உருவாவதற்கு முன்பே, இங்கிலாந்திலே 15ஆம் நூற்றாண்டு வாக்கில், ஆங்கி லேயர், ஸ்காட்லாந்தியர், வேல்ஸ் மற்றும் அயர்லாந்து இனத்தவர் ஆகியோரால் ஒரு கூட்டாட்சி உருவாகி, அதற்குப் பல்வேறு பெயர்களை சூட்டினர். கடைசியாக சூட்டப்பட்ட பெயர்தான் "ஐக்கிய இராச்சியம்" (யுனைடெட் கிங்டம்). அதுபோல், இங்கு "அமெரிக்க ஐக்கிய நாடுகள்" (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா)! அதாவது, நாட்டின் பெயரில் எந்த இனத்தின் பெயரும் வந்துவிடக்கூடாது என்ற பொது சிந்தனை இங்கிருந்தது.

இதை வைத்துதான் இரசியாவில் இலெனின், "சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்" (யூனியன் ஆப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்ளிக்ஸ்) என்று பெயரிட்டார். இந்தியாவிலும் அரசமைப்புச் சட்டத்தில் "அரசுகளின் ஒன்றியம்" (Union of States) என்று இந்தியாவைக் குறிப் பிட்டனர். இப்போது, அவற்றையெல்லாம் காலி செய்து ஒற்றையாதிக்கத் திணிப்பு நடந்து கொண்டி ருக்கிறது.


நம்முடைய வளமான தமிழர் மரபைக் கொண்டு, இதை நாம் எதிர்க்க வேண்டும். நமக்கு சங்க காலத்திற்கு முன்பிருந்தே "தேசம்" - "தேசியம்" குறித்த சிந்தனைகள் இருந்தன. தமிழ்நாடு, தமிழகம் என்பது சேர, சோழ, பாண்டியர் காலத்திலேயே நம் இலக்கியங்களில் குறிப் பிடப்பட்டுள்ளது. மொழியை வைத்து தேசத்தை அடை யாளம் காணும் சிந்தனை முறை இங்கிருந்தது.

எனவே, நமது மண்ணுரிமையைக் காக்க நாம் புதிய விழிப்புணர்வைப் பெற்றாக வேண்டும். அரசியல், பொருளியல், பண்பாடு, அறம் என அனைத்திலும் ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இன்றைக்கு நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு - தமிழ்த் தேசியமே அந்த மாற்றுத்திட்டம்! அது குறித்த சிந்தனை களை நாம் மேலும் விரிவாக்கிக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு தோழர் பெ. மணியரசன் பேசினார்.

# வலியில்லா அறுவைச் சிகிச்சைக்கு வித்திட்டவர் மார்ட்டின்

டாக்டர் ஜெ. எட்வர்ட் ஜான்சன்,
தமிழ்நாடு மயக்கவியல் மருத்துவர்கள் சங்கத் தலைவர்



அக்டோபர் 16ஆம் தேதி உலக மயக்கவியல் தினம். அறுவைச்சிகிச்சை என்றவுடன் நமக்கு முதலில் நினைவுக்கு வருவதும், நாம் மிகவும் பயப்படுவதும் வலியைப் பற்றித்தான். வலியில்லா அறுவைச் சிகிச்சைக்கு முதன் முதலில் வித்திட்டவர் டபிள்யூ. ஜி.மார்ட்டின்.

இவர், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பல் மருத்துவர். 1846ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் மாஸாசேட் ஜெனரல் ஆஸ்பத்திரியில் எட்வர்ட் கில்பர்ட் என்ற நோயாளியின் கழுத்தின் இருந்த ரத்தக் கட்டியை அகற்ற ஈதர் என்ற மயக்க மருந்தை முதன் முதலில் பயன்படுத்தி நோயாளியை மயக்க நிலைக்கு உட்படுத்தி அறுவைச் சிகிச்சையை வலி இல்லாமல் செய்து காட்டினார். அதற்கு முன் பெல்லாம் அறுவைச் சிகிச்சைக்கு வலி தெரியாமல் இருக்க நோயாளிக்கு அதிக அளவில் மது அருந்தச் செய்து அவர்களை மயக்க நிலையில் வைத்திருப்பர். அந்த நோயாளி மயக்கம் தெளிவதற்குள் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஆபரேசனை செய்து முடிப்பர். அந்த நிலையை முற்றிலும் மாற்றி மருந்து மூலம் மயக்கம் செலுத்தி அறுவைச் சிகிச்சை செய்ய முடியும் என்று உலகிற்கு மார்ட்டின் நிரூபித்துக் காட்டிய அக்டோபர் 16ஆம் நாளை உலக மயக்கவியல் நாளாக நாம் கடைபிடிக்கிறோம். அறுவைச் சிகிச்சையின் போது பொதுவாக மூன்று வகையான முறைகளில் மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது.

முதல் வகையில் ‘ஸ்பைனல் அனேத்சியா’ எனப்படும் முதுகுத் தண்டில் ஊசி கத்தி மூளை தண்டு வட திரவத்தில் மயக்க மருந்து செலுத்துவது. அடிவயிறு, தொடை, கால் பகுதியில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை களை வலியின்று மேற்கொள்ள இம்முறை உதவுகிறது. இரண்டாவது முறை நரம்பு செயலி

மூப்பு முறை அதாவது அறுவைச் சிகிச்சை செய்யப் போகும் பாகத்திற்கான வலி உணர்வை உண்டாக்கும் நரம்பு களை மட்டும் மரத்துப் போகச் செய்தல். பெரும் பாலும் தோள்பட்டை மற்றும் கைகளுக்கான அறுவைச் சிகிச்சைகள் இம்முறையில் மேற்கொள்ளப் படுகிறது. இந்த வகையில் நரம்பு செயலிழக்க இப்போ தெல்லாம் அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் கருவியினை உபயோகப்படுத்தி மிகவும் துல்லியமாக தேவைப்பட்ட நரம்புகளில் மட்டும் மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. மேற்கூறிய இரண்டு முறைகளிலும் நோயாளி சுயநினைவுடன் இருப்பார்.

மூன்றாவது முறை, நாம் அனைவரும் யூகித்து வைத்துள்ள மயக்க முறை அதாவது முழு மயக்கம் கொடுத்தல். இம்முறையில் தலை, கழுத்து மற்றும் பெரிய நீண்ட நேர அறுவைச் சிகிச்சைகள் மற்றும் லேப்ராஸ்கோப் எனப்படும் நுண்துளை அறுவைச் சிகிச்சை ஆகியவை வலியின்று சாத்தியப்படுத்திய முறை இதுவாகும். இம்முறையில் அறுவைச் சிகிச்சை யின் போது நோயாளிக்கு குரல்வளையில் குழாயிட்டு செயற்கை சுவாசம் அளிக்கப்படும். தேவைப் பட்டால் அறுவைச் சிகிச்சைக்குப் பின்பும் செயற்கை சுவாசம் தொடரப்படும். இந்த முறையில் நோயாளிக்கு சுய நினைவு இருக்காது.

மயக்க மருத்துவத்தில் பொதுவாக மக்கள் பயப் படும் விசயம் என்னவென்றால் அளவுக்கு அதிகமான மருந்து செலுத்தப்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்பதாகும். அவ்வாறு பயப்படத் தேவையில்லை. ஏனென்றால் மயக்க மருத்துவர் உங்கள் அருகிலேயே இருந்து உங்கள் மருந்தின் அளவு, நாடித் துடிப்பு, ரத்த அழுத்தம் மற்றும் இன்ன பிற உயிர் அளவீடுகளை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் ஒவ்வொரு நொடியும் கவனித்துக் கொண்டிருப்பர்.

சர்க்கரைவியாதி உள்ளவர்கள் மாத்திரை எடுத்துக் கொண்டிருந்தால் அதனை நிறுத்தி அறுவைச் சிகிச்சைக்கு சில நாட்களுக்கு முன்பே இன்சுலின் ஊசிக்கு மாற்ற வேண்டியது இருக்கும். அதைப் போல ரத்த அழுத்தத்துக்கான மாத்திரை எடுத்துக் கொண்டிருந்தால் அதனை அறுவைச் சிகிச்சை நாள் அன்று வரை தொடர வேண்டியது இருக்கும். பொது வாக டாக்டர்கள் கூறும் அறிவுரைகளை அப்படியே பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில் அது உயிருக்கே ஆபத்தாக அமைந்து விடும்.. ●

---

## ஆதி மருத்துவச்சி

மகப்பேறு மருத்துவம் படிக்காத
ஆதி மருத்துவச்சி ஆராயி
குறுக்கில் கிடக்கும் சிசுவையும்
பிரசவத்தில் காப்பாத்தும் மகமாயி

அவள் பிரித்தெடுத்த சிசுவெல்லாம்
இன்று மதயானையாய் அலையுதுகள்
திண்ணையிலிருந்து கேலி பேசும்
பண்ணை வீட்டு பரந்தாமன்
அன்னிக்கே பரலோகம் போயிருப்பான்
ஆதிமருத்துவச்சி ஆராயி இல்லேன்னா

சிசேரியன் செய்த டாக்டரம்மா
அருணாவுக்கு கைகூப்பி மரியாதை
சுகப்பிரசவம் செய்த மருத்துவச்சி
ஆராயிக்கு கேலியும் கிண்டலும்
ஆகா, என்னே மருத்துவ மகிமை!

இளந்தேவன்
9345551241

## இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கியவர்?




**பி**ரிட்டீசு அரசு இந்தியாவில் கல்கத்தாவை தலை நகராகக் கொண்டு ஆண்டது. பின்னர் நிர்வாக வசதிக்காக டில்லிக்கு மாற்றினார்கள். இதனை எதிர்த்து நடைபெற்ற ஊர்வலத்தில் ராம்பிகாரிகோசு என்ற வங்காள வாலிபர் கையெறி குண்டை வீசிவிட்டு தலை மறைவானார். அந்த வாலிபரை பிரட்டீசு அரசால் கடைசிவரை கைது செய்ய முடியவில்லை.

அந்த இளைஞர்தான் (ஐ.என்.ஏ.) இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கியவர். பின்னர்தான் அதனை நேதாஜி அவர்கள் தொடர்ந்தார்.

தகவல் – **இளந்தேவன்**

# பசுமைச்சாலை திட்டத்துக்கு எதிராக அறவழியில் போராடுபவர்களை கைது செய்யக்கூடாது போலீசாருக்கு ஐகோர்ட்டு உத்தரவு

8 வழி பசுமைச்சாலை திட்டத்துக்கு எதிராக அறவழியில் போராட்டம் நடத்துபவர்களை கைது செய்யக்கூடாது என்று போலீசாருக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### திட்டத்துக்கு எதிர்ப்பு

சென்னைசேலம் 8 வழி பசுமைச்சாலை திட்டத்துக்கு தடை கேட்டு அன்புமணி ராமதாஸ் உள்பட பலர் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த வழக்கை ஐகோர்ட்டு நீதிபதிகள் டி.எஸ்.சிவஞானம், பவானி சுப்பராயன் ஆகியோர் விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வக்கீல் நாகசீலா ஆஜராகி, '8 வழி பசுமைச்சாலை திட்டத்துக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்திய 10 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். அமைதியான, அறவழியில் போராட்டம் நடத்தினால், போலீசார் கைது செய்கின்றனர்' என்று கூறினார்.

### கைது தேவையில்லை

அப்போது குறுக்கிட்ட அரசு வக்கீல்,'கைது செய்யப்பட்ட அனைவரையும் போலீசார் விடுதலை செய்து விட்டனர்' என்றார் இதையடுத்து நீதிபதிகள், 'அமைதியான முறையில் அறவழியில் போராட்டம் நடத்த மக்களுக்கு உரிமை உள்ளது. இந்த 8 வழி பசுமைச் சாலை திட்டம் அமல்படுத்தும்போது பலரது நிலங்கள் பறிபோகும். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவர்களை கைது செய்யக்கூடாது. தீவிரமாக நடவடிக்கை எடுக்கக்கூடாது.

இதுபோன்ற செயல்களில் இருந்து போலீசார் விலகி இருக்க வேண்டும். அதே நேரம், சில குழுக்கள் பிரச்சினையை பெரிதாக்க போராட்டம் நடத்தலாம். உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் யார்?, பிரச்சனையை பெரிதாக உருவாக்குபவர்கள் யார்? என்பதை கண்டுபிடிப்பதில் போலீசார் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று கருத்து தெரிவித்தனர்.

### தலைமறைவு குற்றவாளிகள்

பின்னர்,' திட்டத்தினால்' பாதிக்கப்படும் நில உரிமையாளர்கள் அமைதியான முறையில், அறவழியில் போராட்டம் நடத்தினால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடாது

இந்த திட்டம் செயல்பட உள்ள பகுதியில் சட்ட விரோதமாக 109 மரங்களை வெட்டி சாய்த்த வழக்கில், தலைமறைவாக உள்ள குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதுகுறித்து அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்' என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



## மாலேகாவ் குண்டுவெடிப்பு?



மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டத்தில் உள்ள மேலேகாவ் பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு மசூதி அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் ஏழு பேர் கொல்லப் பட்டனர். மேலும் 101 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவம் குறித்த பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது ராணுவ லெப்டினண்ட் கர்னல் பிரசாத் புரோகித், பெண் சாமியார் சாத்வி பிரக்யா சிங் தாகூர் ஆகியோருக்கு குண்டுவெடிப்பில் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் கைது செய்யப் பட்டனர்.

பின்னர், இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த வழக்கில் ஓய்வு பெற்ற ராணுவ மேஜர் ரமேஷ் உபாத்யாய் உள்பட மேலும் எட்டுப்போர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கில் குற்றம் நிருபிக்கப்படாத காரணத்தால் ஷியாம் சாகு, பிரவீன் தகல்கி, சிவ்நாராயண் கல்சங்கரா ஆகிய மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டனர். தன் மீது சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய தடை விதிக்க வேண்டும் என்று பிரசாத் புரோகித் கோர்ட்டில் தாக்கல் செய்த கோரிக்கை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த நிலையில், அக்டோபர் 30ஆம் நாள் தேசிய புலனாய்வு சிறப்பு நீதிமன்றம் மாலேகாவ் குண்டுவெடிப்பு குற்ற வாளிகள் லெப்டினண்ட் கர்னல் பிரசாத் புரோகித், ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ரமேஷ் உபாத் யாய், பெண் சாமியார் சாத்வி பிரக்யா சிங் தாகூர், சமீர் குக்ர்னி, சுதாகர் திவிவேதி, அஜய் ரகீர்கர், சதாகர் சத்துர்வேதி ஆகி யோருக்கு எதிராக குற்றச் சாட்டுக் களைப் பதிவு செய்தது.



இவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், குற்றவியல் நடவடிக்கை, கொலை முயற்சி உள்ளிட்ட பல்வேறு சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள் ளது.

**சைதை மணிமாறன்.**

## டாக்டர். மு. வரதராசனைப்பற்றி...!



இலக்கியம் படித்து விட்டோம் என்ற இறுமாப்போடு வாழும் ஒரு சில தமிழ்ப் பேராசிரியர்களுக்கு நடுவே இருபத்தி நான்கு மணி நேரமும் இன்முகத்தோடு வாழ்ந் தவர். தமிழ்ப் படித்தவர்கள் நீங்காத வறுமையில்தான் வாழ வேண்டும் என்பதை உடைத் தெரிந்து, வற்றாத வளத்தோடு வாழமுடியும் என்பதை மெய்ப் பித்தவர், ஒரு எடுத்துக்காட்டான தமிழர்.

ஒவ்வொரு தமிழரும் டாக்டர் மு.வ.வைப்போல வாழ்ந் தால், வளம் பெரும் தமிழ், வளம் பெறும் தமிழகம், வளம் பெறுவார்கள் தமிழர்கள்!

*- தமிழ்வாணன், கல்கண்டு வார இதழ், 31-10-1994.*




## தமிழக முதல்-அமைச்சராகும் எண்ணம் இல்லை

தி.மு.க. மகளிரணிச் செயலாளர் கனிமொழி எம்.பி., சென்னையில் நடந்த கருத்தரங்கம் ஒன்றில் பங்கேற்றார். அப்போது அவரிடம், 'உங்களுக்கு முதல்-அமைச்சராகும் எண்ணம் இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இது தொடர்பாக கனிமொழி எம்.பி. நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், நிச்சயமாக எனக்கு முதல்-அமைச்சராகும் எண்ணம் இல்லை. டெல்லி அரசியல் எனக்கு பழக்கமான ஒன்று. எனவே பழகிய ஒரு இடத்திலேயே தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறேன்' என்று தெரிவித்தார்.

தி.மு.க.வில் பெண் உறுப்பினர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? என்று அவரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, நிச்சயமாக, மாவட்டச் செயலாளர்கள் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். எனவே பெண்கள் இன்னும் அதிகமாக அரசியலில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்பதே இன்றைய முக்கியமான தேவை ஆகும்.' என கனிமொழி எம்.பி. பதில் அளித்தார்.




# சிறுமி ராஜலெட்சுமியின் மனக்குரல் எழுப்பும் வினா?

தலையில்லாத என் மகளின் முண்டம் துடித்தது..

வீட்டிற்குள் வீச்சரிவாளோடு உள்ளே வருகிறான் தினேஷ்குமார். சின்னப்பொண்ணுவும் அவரது 13 வயது மகள் ராஜலெட்சுமியும் பூக்கட்டிக் கொண்டிருக்கின்றனர். ராஜலெட்சுமியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் பற தேவிடியா முண்ட என்று அரிவாளால் வெட்ட முயல, அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு என் மகளை ஒன்றும் செய்துவிடாதே என்று கெஞ்சுகிறர் சின்னப்பொண்ணு. தள்ளிப்போடி பறத் தேவிடியா என்று சொல்லிக் கொண்டே ராஜலெட்சுமியின் பின்கழுத்தில் ஓங்கி வெட்டுகிறான் தினேஷ்குமார். வெட்டப்பட்டு ரத்த கசிந்த நிலையில் கிடந்த ராஜலெட்சுமியை இழுத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தவன் மறுபடியும் ஓங்கி அரிவாளால் வெட்டி தலையை எடுத்துக் கொண்டு அருகில் உள்ள தனது தோட்ட வீட்டிற்கு செல்கிறான். அங்கிருந்த தினேஷ்குமாரின் மனைவி சாரதாவும் தம்பி சசிக்குமாரும் இவளது தலையை ஏன் இங்கே கொண்டு வந்தாய்? ரோட்டில் வீச வேண்டியதுதானே என்று கூற ஆத்தூர் தளவாய்பட்டி சாலையில் அந்த தலையை வீசிவிட்டு தினேஷ்குமாரும் சாரதாவும் சசிக்குமாரும் ஒரு வாகனத்தில் ஏறி காவல்நிலையம் செல்கின்றனர்.

கடந்த 22.10.2018 அன்று இரவு 7.30 மணிக்கு வீசப்பட்ட தலித் சிறுமி ராஜலெட்சுமியின் துண்டிக்கப்பட்ட தலை 2 மணிநேரம் கிடக்க ஒட்டுமொத்த தலித் மக்களும் என்ன செய்வதென்று தெரியாமல் வாயிலும் நெஞ்சிலும் அடித்துக் கொண்டு கதறிக் கொண்டிருந்தனர். இரவு 9.30 மணிக்கு அங்கு வந்த போலீசார் தலையையும் வெற்று உடலையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றனர்.

என் மகள் ராஜலெட்சுமியின் தலையில்லாத முண்ட உடல் துடித்தது சார்ஞ் என் நெஞ்சுலயும் மடியிலயும் ஆசையா வளர்ந்த என் மகள கொன்னுட்டான் சார் அந்த படுபாவி என்று சின்னப்பொண்ணு என் கைகளைப் பிடித்து கதறியபோது ஒடிந்த கந்தலான அந்த தாயாரை எப்படி தேற்றுவது என்று



வன்புணர்ச்சியிலும் ஈடுபட முயற்சி செய்திருக்கிறார். தனக்கு நடந்த கொடுமையை ராஜலெட்சுமி தனது பெற்றோரிடம் கூற, விபரம் தெரியாத அந்த தம்பதி யினர் இது வெளியே தெரிந்தால் நம் குடும்பத்தினருக்கு அசிங்கம். அந்த குடும்பத்தோடு பேச்சு வார்த்தையை நிறுத்திக் கொள்வோம் என்று முடிவெடுத்துள்ளனர். தினேஷ்குமாரின் இந்த பாலியல் ரீதியான வக்கிர நடவடிக்கை கிராமங்களில் எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்தது. இதற்கெல்லாம் காரணம் ராஜலெட்சுமி தான் என்று வன்மம் கொண்டு ராஜலெட்சுமியை கொன்றிருக்கிறார் தினேஷ்குமார்.

தெரியாமல் தவித்து நின்று கொண்டிருந்தேன். மூன்று நாட்கள் ஆகிவிட்டது. வற்றிய குளத்தில் உள்ள இறுதி தண்ணியும் கசிவது போல அந்த தாயாரின் கண்களிலும் வெயில் படர்ந்த கண்ணீரை பார்க்க முடிந்தது.

சென்னையில் சுவாதி கொல்லப்பட்டபோது, டெல்லியில் நிர்பயா கொல்லப்பட்ட போது நீதிக்காக ஆர்ப்பரித்த ஜனத்திரள்களில் சிறு துகள்களாவது ராஜலெட்சுமியின் சேரி வீட்டினை எட்டிப் பார்த்திருக்கும் என்று நம்பிக்கையோடு சென்றேன். எங்களை யாரும் பார்க்க வரல சாமி, மகளை பறிகொடுத்துவிட்டு அனாதையாக நிற்கிறோம் என்று சொன்னபோது அவரது முகத்தை பார்க்க முடியாமல் குற்றவுணர்ச்சியோடு வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

என்னதான் நடந்தது? விசாரணையில் எவிடன்ஸ் குழு முழுமையாக இறங்கியது. சாமிவேல், சின்னப்பொண்ணு தம்பதியினருக்கு அருள்ஜோதி, ராஜலெட்சுமி என்கிற மகள்களும், சற்குணநாதன் என்கிற மகனும் இருக்கிறார்கள். சாமிவேல் தோட்டி வேலை செய்பவர். இறப்பு சடங்கில் பிணங்களை அடக்கம் செய்கிற பணியில் ஈடுபட்டிருப்பவர்.

சேலம் ஆத்தூரிலிருந்து சுமார் 5கி.மீ தொலைவில் உள்ளது தளவாய்பட்டி. அங்கிருந்து 1கி.மீ தொலைவில் தோட்டத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் சாமிவேல் குடும்பத்தினர். இவர்களது கடைக்குட்டி ராஜலெட்சுமி 8ம் வகுப்பு படித்து வருகிறாள். இவர்களது வீட்டிற்கு அருகாமையில் தினேஷ்குமாரும், அவரது மனைவி சாரதாவும் தோட்ட வீடு கட்டி வசித்து வருகின்றனர். சுமார் 2 ஏக்கர் நிலம் தினேஷ்குமாருக்கு உள்ளது. பெரிய அளவில் வீடும் உள்ளது.

கடந்த சில தினங்களாக ராஜலெட்சுமியிடம் தினேஷ்குமார் ஆபாசமாக பேசியிருக்கிறார். பாலியல்

இது முக்கிய காரணம். மற்றொரு காரணமும் எங்களது விசாரணையில் தெரிய வந்தது. தினேஷ் குமார் சாரதா குடும்பத்தின் சில உண்மைகள் சிறுமி ராஜலெட்சுமிக்கு தெரிய வந்திருக்கிறது. அதனால் தங்களது குடும்ப மானம் போய்விடும் என்று பயந்து கொண்டு திட்டமிட்டு கொலை செய்திருக் கிறான் தினேஷ்குமார்.

கொலை செய்த தினேஷ்குமாரை அவரது மனைவி சாரதாவும் அவரது தம்பி சசிக்குமாரும் பிடித்துச் சென்று காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர் என்கிற செய்தி முற்றிலும் தவறானது. ஆத்தூர் காவல் நிலையத்திற்கு தினேஷ்குமார் நேரடியாக சென்று சரணடைந்திருக்கிறான். உடன் இருவரும் சென்றிருக்கின்றனர். இருசக்கர வாகனத்தை சசிக்குமார் ஓட்ட, அதற்கு பின்பு தினேஷ்குமாரும் சாரதாவும் உட்கார்ந்து கொண்டு சென்றிருக்கின்றனர்.

போகிற போது தினேஷ்குமார், பறத் தேவிடியா பசங்களா நான் ஜாமீனில் சீக்கிரம் வருவேன். உங்களை எல்லாம் விடமாட்டேன். என் வீட்டையும் என் நிலத்தையும் என் மாட்டையும் எவனும் எதுவும் செய்யக் கூடாது என்று மிரட்டிவிட்டு சென்றிருக்கிறான் தினேஷ்குமார்.

ஆனால் போலீஸ் விசாரணையில் தினேஷ்குமாரின் மனைவி சாரதா, என் கணவர் சமீப காலமாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார். என் குழந்தையைக் கூட கொல்ல முயற்சி செய்தார். என் கணவருக்கு என் குழந்தை மீது அதிக பாசம். அந்த குழந்தையை யார் தூக்கினாலும் கோபப்படுவார். அந்த பொண்ணு ராஜலெட்சுமி என் குழந்தையை தூக்கியதனால் என் கணவர் எரிச்சலடைந்தார் என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

போலீசார் இரண்டு நாட்கள் மருத்துவர்களோடு தினேஷ்குமாரை மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆய்வு செய்து பார்த்தபோது அவரது மனநலம் சரியாக இருக்கிறது என்றும் எந்த விதத்திலும் பாதிக்கப்பட வில்லை என்றும் கண்டறிந்துள்ளனர். அதுமட்டுமல் லாமல் போலீஸ் விசாரணையில் தான் மனநலம் பாதிக்கப்பட்டதாக நடித்தேன் என்றும் தினேஷ்குமார் கூறியிருக்கிறான்.

இந்த கொலை வழக்கில் சாரதாவும், தினேஷ் குமாரின் தம்பி சசிக்குமாரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். இவர்களுக்கு தெரியாமல் இந்த கொலை நடந்திருக்காது. கொலையை செய்துவிட்டு தற்போது தன் கணவனை காப்பாற்றிக் கொள்வதற்காக சாரதா நாடகம் ஆடுகிறார் என்று அங்கிருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

தினேஷ்குமார் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தால் சின்னப்பொண்ணுவின் வீட்டை தேடி உள்ளே வந்து சாதியைச் சொல்லி இழிவுபடுத்தி சிறுமி ராஜ லெட்சுமியை வீச்சரிவாளால் வெட்டியிருப்பானா? மனநலம் பாதிக்கப்பட்டிருப்பவனுக்கு எப்படி சாதியைச் சொல்லி இழிவுபடுத்த தெரிகிறது? மனநலம் பாதிக்கப்பட்டவன் என் நிலத்தையும் என் வீட்டையும் மாட்டையும் எவனும் ஒன்னும் செய்யக்கூடாது என்று எப்படி மிரட்ட முடியும்?

அதுமட்டுமல்லாமல் சாரதா போலீசாரிடம், என் கணவருக்கு முனி பிடித்திருக்கு என்று கூறியிருக்கிறார். அதாவது தினேஷ்குமார் இந்த கொலையை செய்யவில்லை சாமி தான் இந்த கொலையை செய் திருக்கிறது என்று கதை கட்டுகிற வேலையில் சாரதா முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்.

சில முற்போக்குவாதிகள் களத்திற்கு செல்லாமல் சாரதாவிற்கு வக்கீல் வேலை பார்க்க ஆரம்பித்திருக் கின்றனர். சாரதா தலித் பெண் என்றும், ஒரு தலித் பெண்ணை திருமணம் செய்த தினேஷ்குமாருக்கு எப்படி சாதிய வன்மம் இருக்கும் என்று கேள்வி எழுப்புகின்றனர். இது முற்றிலும் பொய். சாரதா பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல. மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்.

தன் கணவன் ஒரு கொலையை செய்தால் ஒரு மனைவியின் மனநிலை எப்படி இருக்கும்? மிகப்பெரிய ஒரு குற்றத்தை செய்துவிட்டானே, எப்படி நம்மால் இந்த சமூகத்தில் தலைநிமிர்ந்து நடக்க முடியும். நம் வாழ்க்கையை கெடுத்துவிட்டானே என்று புலம்பு வார்கள். ஆனால் சாரதா பேச்சுக்கு பேச்சு தன் கணவன் தினேஷ்குமாரை, என் அம்மு ரொம்ப நல்லவர், அவருக்கு முனி பிடித்துவிட்டது என்று தன்னிலை விளக்கம் கொடுக்க ஆரம்பித்திருப்பதே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பின்னணியில் ஒரு சதிக் கும்பல் பொது தளத்திலும் விசாரணையிலும் எப்படி பேச வேண்டுமென்று பயிற்சி கொடுப்பது தெரிய வருகிறது.

இதில் கொடுமை என்னவென்றால் போலீசாரின் நடவடிக்கை கேவலமாக இருக்கிறது. பாதுகாப்பில் இருந்த போலீசார் தினேஷ்குமாருக்கு சொந்தமான 7 8 மாடுகளுக்கு புல் அறுத்துபோடுவது, தண்ணீர் கொடுப்பது போன்ற வேலையில் ஈடுபட்டுள்ளனர். இதைப் பார்த்த ராஜலெட்சுமியின் தந்தை சாமிவேல், போலீசாரிடம் சென்று நீங்கள் எங்களுக்கு பாது காப்பிற்கு வந்தீர்களா? கொலைகாரனின் மாடுகளை பராமரிக்க வந்தீர்களா? என்று கேள்வி எழுப்ப, போயா வேலையைப் பாரு, செத்து போன உன் மக இனிமேல் உயிரோடு வரப்போறாளா? உயிரோடு இருக்கும் மாடுகளை காப்பாற்ற வேண்டாமா? என்று எகிறி ருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல் வாடகை வண்டியை பிடித்து அந்த மாடுகளை பாதுகாப்புடன் தினேஷ்குமாரின் மாமியார் வீட்டிற்கு போலீசார் அனுப்பியுள்ளனர்.

மாடுகளின் மீது கரிசனம் காட்டுகிற போலீசாருக்கு கொல்லப்பட்ட சேரி குழந்தையின் குடும்பத்தின் வலியை புரிந்து கொள்ள மறுப்பது ஏன்?

மீ டு இயக்கம் இன்று இந்தியா முழுவதும் எழுச்சி யுடன் பரவியிருக்கிறது. படித்தவர்களும் வசதிபடைத்த வர்களும் பிரபலங்களும் தங்களுக்கு நடந்த கொடு மையை சொல்வதற்கு தளம் இருக்கிறது. அதை பதிவு செய்வதற்கு ஊடகங்கள் இருக்கின்றன. அந்த பாதிக்கப் பட்டவர்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டு மென்று அரசு அதிகாரிகள் நிர்பந்திக்கப்படுகின்றனர். ஆனால் தனக்கு நடந்த பாலியல் வன்முறை தன் குடும்பத்தி னரிடம் சொன்னால் என்பதற்காகவே தலை துண்டிக் கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறாள் சேரி சிறுமி.

மீ டு வன்முறையை கேள்விப்பட்டிருக்கிறோம். சாதி வெறியர்கள் மீ டு படுகொலையை சேரியில் நடத்துகிறார்கள். ஆனால் இதுபோன்ற சேரி படு கொலைகளுக்கு நீதிக்குரல்கள் வருவதில்லை. ஊட கங்கள் வருவதில்லை. அரசு அதிகாரிகள் வருவதில்லை.

சேரியைப் போன்றே எங்கள் நீதியையும் ஒதுக்கி வைத்திருக்கும் உங்கள் முற்போக்கு முகமூடி கழண்டு தொங்குகிறது. இறுதியாக ஒரே ஒரு கேள்வி. தினேஷ் குமார் மட்டும் தான் இந்த கொலையை செய்தானா? ராஜலெட்சுமிக்கு குரல் கொடுக்காமல் களத்திற்கு வராமல் கள்ள மௌனம் காக்கிற நாம் தினேஷ் குமாரின் கொலையின் பங்காளிகளா? எதிராளிகளா?

**சேரியின் கேள்விக்கு உங்களின் எதில் என்ன?**

இந்த கேள்வியை நான் எழுப்புவதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். எரிக்கப்பட்ட ராஜலெட்சுமி யின் சாம்பல் திகட்டலிலிருந்து எழுவதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

**- எவிடன்ஸ் கதிர்**

# வேதங்கள் அபத்தமானவை அசிங்கமானவை ஆபாசமானவை! வேதங்கள் புனிதமானவைஉயர்ந்தவை என்பது பொய்,பித்தலாட்டம், புனைவு!

## - எழுத்தாளர் சாரு நிவேதிதா

“வேதம் முழுக்கவும் நிரம்பியிருப்பது எதிரிகள் மீதான துவேஷம், காமவெறி சோமபான போதை.

பெரியாரின் கோபமும் ஆவேசமும் எனக்குப் புரிந்தது” என்கிறார் எழுத்தாளர் சாருநிவேதிதா.


பெரியார் மீது எனக்குக் கொஞ்சம் மனஸ்தாபம் இருந்தது. மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவ தற்காக தன் வாழ்நாள் முழுவதும் அவர் நடத்திய போராட்டத்தில் கலாச்சாரம் சம்பந்தப்பட்ட பல செழுமையான பகுதிகளும் அடித்துக்கொண்டு போய் விட்டனவே என்பதுதான் என் மனஸ்தாபத்திற்குக் காரணம்.

உதாரணமாக, பிராமணீயத்தை எதிர்ப்பதற்காக சமஸ்கிருத மொழியை எதிர்த்தார். அதனால் காளிதாசன் எழுதிய அதி அற்புத காவியங்களை நாம் படிக்க முடியாமல் போயிற்று. வருணபேதத்தை முன்னிறுத்துகின்றன என்பதால் புராணங்களையும் இதிகாசங்களையும் எதிர்த்தார். அதனால் உலக இலக்கியங்களிலேயே தலைசிறந்த காவியம் என்று உலக எழுத்தாளர்களால் போற்றப்படும் மகாபார தத்தைப் படிக்காமல் விட்டோம்.


இப்படியெல்லாம் இவ்வளவு காலம் நினைத்துக் கொண்டிருந்தேன். அதனால் சமஸ்கிருதத்தில் உள்ள முக்கிய நூல்களை நானே படிக்க ஆரம்பித்தேன். அப்போதுதான் பெரியாரின் கோபமும் ஆவேசமும் எனக்குப் புரிந்தது.

முக்கியமாக வேதத்தைப் படித்தபோது, ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்களே இந்து மதத்தின் பெரிய புனித நூல்களாகக் கருதப்படுபவை.

வேதம் படித்தவனே அறிஞனாகக் கருதப்படு கிறான். மேலும் சூத்திரனோ அல்லது நான்கு வருணங்களுக்கு அப்பாற்பட்ட விளிம்பு நிலையில் தள்ளப்பட்டு, இழி தொழிலைச் செய்ய நிர்பந்திக்கப் பட்ட அடிமை மக்களோ வேதத்தைக் கேட்டாலே போதும், அவர்கள் காதில் ஈயத்தைக் காச்சி ஊற்றச் சொல்கிறது மனு தர்மம்




வேதத்தை முற்றாக அறிந்தவன், வேதாந்தி என அழைக்கப் பட்டான். வேதத்தில் இல்லாததே இல்லை யென்று இன்றளவும் கருதப்படு கிறது. நான்கு வேதங்களையும், ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும், பின்னர் முடிவிலி ருந்து ஆரம்பம் வரை தலை கீழாகவும் ஓதத் தெரிந்த வர்கள் கன பாடிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.



இக்காரணங்களால் வேதத்தை நான் மிகுந்த மரியாதை யுடனேயே வாசிக்க ஆரம் பித் தேன். பிறகு தான் தெரிந்தது .

தெருவில் நடக்கும்போது காலில் அசிங்கத்தை மிதித்து விட்டேன் என்று. ஆம்! வேதத்தில் அவ்வளவு அசிங்கமும் ஆபாசமும் உள்ளன.

இந்துக்களில் அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்த வராக இருந்தாலும், அவர்கள் வீட்டில் எந்த சுப காரியங்கள் நடந்தாலும் அங்கே தவறாமல் அழைக்ப்படுபவர்கள் புரோகிதர்கள்.

வாத்தியார் என்று பார்ப்பனர்களின் பேச்சு மொழியால் அழைக்கப்படும். அப்புரோகிதர்கள் அந்த சுபகாரியத்தின்போது ஹோமம் வளர்த்து பல மந்திரங்களை மணிக்கணக்கில் ஓதுவார்கள்.

அந்த மந்திரங்களின் அர்த்தத்தைக் கேட்டால் நீங்கள் எல்லோரும் பயந்து ஓடி விடுவீர்கள். ஆம்!

ஒரு சுபதினத்தின்போது என்னை எதிர்ப்பவர்கள் நாசமாகப் போக, அவர்களின் கண்களைத் தோண்டி எடுக்க! புல் பூண்டு இல்லாமல் அவர்கள் வம்சம் அழிந்து போக!" என்ற ரீதியில் மணிக்கணக்கில் ஒருவர் சாபம் விட்டால், அவ்வார்த்தைகள் அந்தச் சூழலை எவ்வளவு அருவருப்பாக மாற்றும்? வேதம் முழுக்கவும் இம்மாதிரி அருவருப்பான வசைகளே நிறைந் திருக்கின்றன.

இடையிடையே கவித்துவம் நிரம்பிய சில அற்புதமான பகுதிகளும் உண்டு. உதாரணமாக: நான் தேனைவிட தேனாயுள்ளேன். மதுரத்தைவிட மதுரமாயுள்ளேன். நீ என்னையே தேன் மிகும் சாகையாக விரும்பு எனது சலனம் தேன் மயம். என் கமனம் தேன்மயம். நான் மொழியால் தேன் மயமாய் மொழிகிறேன்.

நான் தேன் தோற்றமாக வேண்டும் (அதர்வண வேதம்: காண்டம் 1,34 தேன்மயம்)

ஆனால் இந்தக் கவித்துவத்தையும் மீறி வேதம் முழுக்கவும் நிரம்பியிருப்பது: துவேஷம், எதிரிகள் மீதான துவேஷம். எதிரிகள் யார் என்று பார்த்தால் பார்ப்பனர்களுக்கு அடிமையாகத் தங்களை ஒப்புக் கொடுக்காதவர்கள். அவர்கள் மீதான சாபத்தைப் பாருங்கள். இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அவர்களது சிரங்களைத் துண்டித்திடுக எங்கள் பசுவை நீ இம்சித்தால் நாங்கள் உன்னைக்குத்திக் கொள்வோம் (அத்தியாயம்சம்ஹாரம்)

எங்கள் எதிரிகளை ருத்திரன் நாசம் செய்க

சாபத்தால் சபிப்பவள், தன் மக்களையே புசிப்பாளாக

தனது மகனையும் சகோதரியையும் பெண்ணையுமே புசித்திடுக

அக்னியே! எங்களைத் துவேஷிப்பவனை உனது சுடரால் எரித்துவிடு

**தமிழினப் பாரம்பரியமோ இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்கிறது. நமக்குத் தீமை புரிந்த ஒருவனைத் தண்டிக்கும் வழி, என்னவென்றால், அவன் வெட்கப் படும் விதத்தில் அவனுக்கு நன்மை புரிவதே. இதுவும் 2000ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதுதான். இப்படிப்பட்ட சிந்தனையின் ஒரு கீற்றைக் கூட நான்கு வேதங்களிலும் காண முடியவில்லை.**

இம்சை செய்பவனே! உங்களது புன்மைகள் மறுபடியும் பின்புறமே வீழ்க!

உங்கள் தோழனைப் புசியுங்கள்!

உங்களது மாமிசத்தைப் புசியுங்கள்

இந்திரா சத்துரு சேனையை மயக்கம் செய்க. அதன் கண்களைப் பிடுங்கு அவனைக் கொல்லு! அவனது விலா எலும்புகளை நொறுக்கு! அவன் சீவனற்றவனாகுக. அவன் சுவாசம் நீக்குக இந்திரா! இதோ பிழிந்த சோமன், மதத்துக்கு இதனைப் பருகு. விரிந்து விசாலமாயுள்ள உனது வயிற்றில் அச்சோமனைப் பொழிந்து கொள். எங்கள் எதிரிகளைக் கொன்று அவர்களின் பசுக்களைப் பாழாக்கு!

இப்போது புரிகிறதா, சில சாமியார்கள் கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவது ஒன்றும் சாத் திரங்களுக்கு விரோதமானதல்ல என்பதும், வேதங்களைப் பின் பற்றியே அக்காரியங்களில் ஈடுபடுகின்றனர் என்பதும்? ஆனால் என்ன செய்வது? 3000 ஆண்டுகளுக்கு முன்பு இப்போது இருப்பதுபோல நீதிமன்றங்கள் இல்லை என்பதை சாமியார்கள் மறந்து விடுகின்றனர். மேலே கூறியுள்ள சுலோகங்கள் அனைத்தும் அதர்வண வேதத்தில் உள்ளவை. இப்படியே அந்த வேதத்தில் 20 காண்டங்கள் உள்ளன. எதிரிகளும் தங்களுக்கு அடிமையாக மறுப்பவர்களும் அழிய வேண்டும் என்ற அரிய கருத்துக்கு அடுத்தபடியாக வேதங்களில் தெரியும் மற்றொரு உன்னத குணாம்சம், சுயநலம், நானும் என் இனத்தைச் சார்ந்தவர்களும் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என்ற சுயநலம். இந்த சுயநலத்திற்காக தேவர்களுக்கு வேள்வி வளர்த்து அதில் நெய்யையும் குதிரைகளையும் போட்டு எரித்து, சொர்க்கத்திலிருக்கும் அவர்களை பூலோகத்துக்கு வரவழைத்து, சோம பானம் என்ற லஞ்சத்தைப் படையல் செய்து எதிரிகளை அழித்து விட்டு, எங்களை மட்டும் வாழவை என்று அவர்களை வேண்டுவதே வேதம்! வேத மந்திரங்கள் இத்தகைய சுயநலத்தையும் துவேஷத்தையும் தான் முழங்குகின்றன. இன்றைய சாமியார்கள்

ரவுடிகளுக்குப் பணம் கொடுத்து தங்கள் எதிரிகளைக் கொலை செய்கிறார்களே, அதே கதை தான் வேதங்கள் முழுக்கவும் விரவிக் கிடக்கிறது.

ஜயித்த பொருள் நம்முடையது. தோன்றுவது நம் முடையது. ருதம் நம்முடையது. தேஜஸ் நம் முடையது. பிரம்மம் நம்முடையது. சுவர்க்கம் நம் முடையது. யக்ஞம் நம்முடையது. பசுக்கள் நம்முடையது அதர்வண வேதத்தில் ஜயகோஷம் என்ற அத்தியாயம். நான் சொல்வதை ஜயிக்க வேண்டும். நான் செல்வம் மிகுந்தவனாக வேண்டும்.

அதர்வண வேதம் செல்வம் என்ற அத்தியாயம் அடுத்தவன் அழிய வேண்டும். நான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்ற உயரிய கருத்தை வலியுறுத்தும் வேத மந்திரங்களை இங்கே மேற்கோள் காட்டுவது மிகவும் சிரமமமானது. ஏனென்றால் எல்லா மந்திரங்களுமே அப்படித்தான் உள்ளன. நான்கு வேதங்களில் அதர்வண வேதம் மட்டும் சிறிது பரவா யில்லை என்று கூறலாம். ஏனென்றால், அதிக காமம் பற்றிய சில கவித்துவமான பகுதிகள் உள்ளன.

ரிக் வேதமோ முழுக்க முழுக்க துதிப்பாடல்கள் இந்திரனே இங்கு வா, சோமத்தைப் பருகு. தலைவனான நீ, வழிபடும் மற்றவர்களையெல்லாம் கடந்து எங்களிடம் துரிதமாகவும் எங்களுக்கு மிக்க உணவை அளிக்கவும் இப்படி ரிக் வேதத்தில் உள்ள மந்திரங்கள் அநேகம். விஞ்ஞான வளர்ச்சியுற்ற இன்றைய காலகட்டத்தில் இத்தகைய வெற்றுச் சொற்களுக்கு எந்த அர்த்தமுமே இருக்க முடியாது. நாகரிக வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியிருந்த ஓர் இனம் எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக இயற்கையையும் வானுலகில் வசிப்பதாக அவர்கள் நம்பிய தேவர்களையும் துணைக்கு அழைத்த பிரார்த்தனைப் பாடல்களே வேதங்கள். அந்நியர்களைக் குறித்த இவர்களது பயமே சுயநலமாகவும் துவேஷமாகவும் மாறியுள்ளது.

ஆனால், தமிழினப் பாரம்பரியமோ இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்கிறது. நமக்குத் தீமை புரிந்த ஒருவனைத் தண்டிக்கும் வழி, என்னவென்றால், அவன் வெட்கப் படும் விதத்தில் அவனுக்கு நன்மை புரிவதே. இதுவும் 2000ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதுதான். இப்படிப்பட்ட சிந்தனையின் ஒரு கீற்றைக் கூட நான்கு வேதங்களிலும் காண முடியவில்லை. எனவே யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சீரிய தமிழ்மரபுக்கு, இந்திரனே! நான் அளிக்கும் சாராயத்தைக் குடித்து விட்டு என் எதிரியின் கண்களைத் தோண்டு என்று உபதேசிக்கும் வேதங்கள் நான்கும் முற்றிலும் மாறு பட்டது. எனவே, வேதங்களைப் பற்றிய ஜீபூம்பா கருத்துகள் அனைத்தும் பொய்யானவை, தவறானவை.

*நன்றி:* ***“ராஜமுத்திரை”*** **22- 3 -2006**

# இவர்தான் பெருமாள் என் நண்பர்!

ஏடு படிப்பதிலும் – அதை
எழுதி முடிப்பதிலும்
பீடுமிகுந்தவராம் – பீம
பெருமாள் என்பவராம்!

புத்தம் புதுநூல்கள் – தொகை
எத்தனை என்றாலும்
சித்தங் கலங்காது – சென்று
மொத்தமாய் வாங்கிடுவார்!

வள்ளல் குமணன்போல் – பொருள்
வாரி வழங்கிவிடும்
உள்ளம் படைத்தவராம் – நட்பில்
ஊன்றி நிலைத்தவராம்!

இனிக்கவே பேசிடுவார் – மன்றில்
இனிப்பும் வழங்கிடுவார்
தனித்தமிழ்ப் பற்றுடையார் – எதையும்
தாங்கும் இயல்புடையார்!

உதவிக் கரம்நீட்டி – நம்மை
உவகையில் ஆழ்த்திடுவார்
இதமாய்ப் பழகிடுவார் – எதையும்
ஈந்து மகிழ்ந்திடுவார்!

(வேறு)
பளிங்கு நெஞ்சைப் பெற்றவராம்
பலநூல் முயன்று கற்றவராம்
இலங்கு நற்புகழ் உற்றவராம்
ஈடும் இணையும் அற்றவராம்!

(வேறு)
அன்பைப் பொழிவார்
அரவணைத் திடுவார்
இவர்தான் பெருமாள் என்நண்பர்!
இதயங் கவர்ந்த பேரன்பர்!

**புலவர் இளஞ்சேரல்.**
*கவிதை வட்டச் செயலாளர்.*



## மிதிவண்டி எங்கே? ஆரோக்கியம் எங்கே?

மிதிவண்டி மிதியப்பா நோய்வரும்
என்ற பயம் இல்லை உனக்கப்பா
கவுரவம் என்ற பெயரிலே சைக்கிளை
ஓரம் கட்டி நிறுத்தி விட்டாயப்பா
உடல் இயக்கத்தினைக் குறைத்துக் கொண்டாயப்பா
அதனாலே உனக்குத்தான் வியாதியப்பா
மிதிவண்டியை மிதிப்பதனால்
72 நாடிகளும் இயங்குதப்பா
அதனால் ரத்தசுத்திகரிப்பு நடக்குதப்பா
உடலிலும் புத்துணர்ச்சி பெருகுதப்பா
மிதிவண்டிய மிதிப்பதனால் எரிபொருள்
செலவு மிச்சமாகுதப்பா
இதை சமூக அக்கறை உள்ளவர்கள்
சொன்னால் மனம் ஏற்க மறுக்குதப்பா
இதனால் பொருளாதாரம் வீழ்ச்சி
அடையுதப்பா அதனால் நாடே
கடனாளி ஆகுதப்பா
பக்கத்துத் தெரு என்றாலும் பந்தாவா
வாகனத்தில் போய் இறங்கச் சொல்லுதப்பா
அதனால் தொப்பையும் பெருசாகுதப்பா
உடலும் பெருத்துப் போச்சப்பா
ஆரோக்கியத்தில சீர்குலைவு உண்டாச்சப்பா!

**வாணியம்பாடி தியாகராஜன்,**
9962082032

## உழவனை வியர்வை உயர்த்துமா?

பார்செழிக்க ஏர்உழுது பயிர்கள் காத்த
ஏர்உழவர் வயிறுமட்டும் பசியால் வாடி
நார்நாராய் நைந்த ஆடை நலிந்த மேனி
நாள்முழுதும் உழைத்துழைத்து தினமும் உண்ணச்
சீராக வாழயெண்ணி தினமும் உண்ணச்
சோறுகூட இல்லாமல் சோர்வா னாரே
ஊருயர உளமகிழ வளமும் சேர்த்த
உழவரெல்லாம் உண்பதென்று? வாழ்வ தென்று?

கொள்ளையிட்டுக் குவிக்கின்ற சிலரா லிங்கே
கொத்தடிமைபோல் வாழும் நிலையு மாகி
உள்ளத்தின் குமுறலாலே ஓடாய்த் தேய்ந்து
உடல்வலிமை அற்றபின்னும் உழைத்துக் கொண்டு
பள்ளமேடு சரிசெய்து பாங்காய் நட்டு
பக்குவமாய்ப் பயிர்வளர்க்க முனைந்து நாளும்
நலிவைத்தான் தழுவுகின்றார் உழவ ரென்றும்
நாட்டிற்குள் அவர்வாழ்வோ வறுமைக் கோட்டில்

நீர்நிலையும் ஆறுகளும் நிரம்பி நின்றும்
நிம்மதியாய்ப் பயிர்செய்ய இயலா வண்ணம்
மாறிவிட்ட சூழ்நிலையால் உழவர் வாழ்வோ
மறைந்துகொண்டே செல்கின்ற நிலையுமாகிச்
சீர்கெட்ட சிந்தனையாய் அணைகள் கட்டி
சிறுமதியார் தரமறுத்த நீரால் ஏழை
போராடிப் பெறுகின்ற நிலையே யானார்
புதுவாழ்வு அவர்க்குமுண்டோ புவியின் மீது?

**கவிஞர். இராமன்,**
சென்னை 24.





# சிறைச்சாலை நினைவுகள்

காதல் திருமணம் செய்து கொண்ட தனது மனைவிக்குப் பிரசவ வலிவந்துவிட்டது. ஆகவே ஊருக்குச் சென்று மனைவியைப் பார்க்க விடுமுறை வேண்டும் என்று கேட்டேன்,

ஆனால் எனது அதிகாரி என்னையும் என் மனைவியையும் மிகவும் கேவலமாகப்பேசிவிட்டார்!

வார்த்தைகளால் விவரிக்க முடியாத மிக மிக அசிங்கமான வார்த்தைகள், மனம் மிகவும் கலங்குகிறேன் அய்யா!

கடைசியாக தங்களிடம் சொல்லத் தோன்றியது! நான் விடை பெறுகிறேன் அய்யா என்ற ஒரு காவலரின் நொறுங்கிப் போன இதயத்தின் வலிகளை வார்த்தைகளாகக் கேட்ட நான் உடனடியாக அந்தக்காவல் ஆய்வாளரை அழைத்து உடனடியாக அந்தக் காவலருக்கு விடுமுறை அளிக்கச் சொன்னேன்! அந்தக் காவலருக்கு அறிவுரைகள் கூறி வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்!

என்நினைவுகள்,

அதிகாரியான எனக்கு நேர்ந்த மிகக் கொடுமையான வேதனை களை நினைத்துப் பார்க்க தூண்டியது! எனது கல்யாணத் திற்கு மூன்று நாட்கள் மட்டுமே விடுமுறை கொடுத்தார் அப்போ தைய என் உயரதிகாரி! நான்காம் நாள் நான் விடுப்பு முடிந்து வந்த போது காஞ்சீபுரம் மாவட்டம் செங்கல்பட்டு சிறைச்சாலைப் பாது காப்புப் பணிக்கென நியமிக்கப் பட்டேன்!

விடுமுறையோ ஓய்வு அனு மதியோ எதுவும் வழங்காத நிலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு புதிதாகத் திருமணமான என் மனைவியை அழைத்துக்கொண்டு வரும் அவரது அண்ணன் திரு. ஜெயராஜ், என் மனைவியை செங்கல்பட்டு பஸ் நிலையத்தில் நிற்கவைத்துவிட்டு ஏறக்குறைய ஒரு பர்லாங் தூரத்தில் உள்ள செங்கல்பட்டு சிறைச் சாலை வாசலில் உள்ள பாதுகாப்புக் காவ லரிடம் என்னைப் பார்க்க அனுமதி கேட்பார்!

சம்மந்தப்பட்ட ஆய்வாளரிடம் அந்தக்காவலர் விவரத்தைக் கூறியவுடன், மிகவும் சத்தமாக அங்கேயிருக்கும் ஒரு சப்இன்ஸ்பெக்டரிடம், யோவ் அந்த சாம் பிரியகுமார் என்ற பையனைப்பாக்க ஏதோ ஒரு பொண்ணு செங்கல்பட்டு பஸ் நிலையத்தில் நிக்குதாம், கண்டகண்ட பெண்களோடு கேடு கெட்டப்பழக்கம் உள்ள நாய்களெல்லாம் அதிகாரியாக வந்து நம்ம மானத்த வாங்கறாங்க, வெறட்டிவிடுய்யா அந்த நாயை“ என்பார்!

அப்படியே நொறுங்கிப்போவேன்! வெளியே காத்து நிற்கும் எனது மைத்துனரிடம், தயவு செய்து போய்விடுங்கள், எனக்குப் பார்க்க இஷ்டமில்லை என்று கூறி அனுப்பிவிடுவேன்!

தன்னைக் காண, தன் கணவர் வருவார் என்று காத்திருக்கும் மனைவியை ஏதேதோ சமாதானம் சொல்லி எனது மைத்துனர் ஊருக்குக்கூட்டிச் சென்று விடுவார்! இப்படி எத்தனையோ மாதங்கள்

கொடுமையாகப் பழிவாங்கப்பட்டேன்! தன் மனைவியைப் பரத்தை என்று சொல்லக்கேட்கும் யாரும் நிச்சயமாக நல்ல கணவனாக இருக்க முடியாது! பிறவியிலேயே முரட்டுகுணம் கொண்ட நான் ஏனோ அமைதியாகத் தாங்கிக்கொண்டேன்!

இந்தப்பதிவை இன்று நான் முகநூலில் எழுதும் வரை நடந்த எந்தவிவரமும் என் மனைவிக்கு இதுவரை தெரியாது! அவரது அண்ணனுக்கும் தெரியாது, சிறைச்சாலைப் பாதுகாப்புப்பணியில் நான் மிகவும் பிஸியாக இருக்கிறேன் என்பதைத்தவிர!

காலங்கள் உருண்டோடியது!

சென்னையில் கடந்த சில ஆண்டுகளுக்குமுன் நான் கிஞிஷிறி யாகப் பணியாற்றிய அலுவலகத்தின் முன், எனது எழுத்தர் வெளியே யாரிடமோ கத்திக்கொண்டிருந்தார்! என்ன சென்று வினனேன். யாரோ பழைய அதிகாரி, ஊறுகாய் வியாபாரம் செய்கிறார். புதிய ADSP

சார் இடம் ஒரே ஒரு பாட்டில் ஊறுகாய் வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள்“ என்று எரிச்சலூட்டுகிறார் என்றார்.

அவரை உள்ளே வரச்சொல்லுங்கள் ராஜேஷ் என்றேன்!

உள்ளே வந்தவரைப் பார்த்ததும், நடுங்கிப் போய்விட்டேன். பயபக்தியோடு எழுந்து நின்று வாருங்கள் அய்யா என்று வரவேற்றேன்! அவருக்கு என்னை நினைவில்லை! பல ஆண்டுகளுக்கு முன்பு செங்கல்பட்டு சிறைச்சாலையில் என் மனைவியை மிக மிகக்கேவலமாகப் பேசி இழிவுப்படுத்திய அதே ஆய்வாளர்தான் அவர்! என்னைப்பற்றிக் கூறவில்லை, மிகவும் களைப்பாக இருந்த அந்தப் பழைய அதிகாரிக்கு நிறையப் பழச்சாறுகளும் உணவும் கொடுத்துவிட்டு, என்ன வேண்டும் என்று கேட்டேன்!

நான் காவல்துறையில் அதிகாரியாகப் பணியாற்றியவன், இன்று வறுமையில் மிகவும் கஷ்டப் படுகிறேன்! ஒரு ஊறுகாய் பாட்டில் வாங்கிக் கொள்ளுங்கள், எங்கள் குடும்பம் மிகவும் நன்றியாக இருப்போம் என்றார்! அவரிடமிருந்த மொத்த ஊறுகாய் பாட்டில்களையும் வாங்கிக்கொண்டு அவரிடம் ஒரு மிகப்பெரிய தொகையைக் கொடுத்த போது அவர் கண்கள் மிகவும் கலங்கியது!

உங்களுக்கு எப்போதெல்லாம் உதவி தேவைப் படுகிறேதா என் எழுத்தரைத் தொடர்புகொள்ளுங்கள் என்றேன்! எனது காவல்துறை வாகனத்திலேயே அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்!

செங்கல்பட்டுச் சிறைச்சாலையில் என்னோடு அப்போது பணியிலிருந்த அருமைச்சகோதரர் ஆய்வாளர் திரு. ஆறுமுகம் அவர்கள் இன்று எனக்கும் என் மனைவிக்கும் ஒரு சேர மாலைகளும் பொன்னாடை களும் போர்த்திய போது கண்கலங்கினார்!

ஏனோ எனது கண்களும் கண்ணீரால் நிறைந்தது செங்கல்பட்டு சிறைச்சாலை நினைவுகளால்!

அந்தக் கொடுமையான நாட்களில் நான் மட்டும் ஆத்திரப்பட்டிருந்தால் நிச்சயமாக இன்று இத்தனைய தம்பி தங்கைகளும் நல்ல மக்களின் அன்பு எனக்குக் கிடைத்திருக்காது!

நன்றி ஆறுமுகம்! நானும் எனது மனைவியும் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்!

ஒரே காரணம் எங்கள் வேதனைகளில் நாங்கள் யாரையும் நிந்தித்ததில்லை! பழிவாங்குவதோ, பொங்கி வெடிப்பதோ வாழ்க்கையல்ல! இடற்பாடுகளையும், ஏளனங்களையும், கண்ணீரையும் தாங்கிக்கொள்வதே சிறந்த வாழ்க்கை!

நமக்குக் கேடு செய்வோரையும் நேசிப்பது தான் மிகச் சிறந்தவாழ்க்கை! மன்னிப்பதைப் போல மிகச் சிறந்த பண்பு வேறில்லை என்பதை எனது காவல் துறை அனுபவங்களால் உணர்ந்து கொண் டேன், என் என் கீழ் பணிபுரிவோருக்கும் அதையே எனது வாழ்த்தாக, வேண்டுகோளாகத் தெரிவிக் கிறேன்!

எங்களுக்கு என்றுமே ஓய்வில்லை! காரணம் இனிமேல் தான் வாழவேண்டும், பிறருக்காகவும் எங்களுக்காகவும்.

அன்புடன்

**சாம் பிரியக்குமார்.**

## திட்டமிடுதலும், செயல்படுத்தலும்!

திட்டமிடுதலைப் புறக்கணித்து வெற்றி பெற்றவர் எவரும் இல்லை.

திட்டம் எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்குத் தான் நாம் முன்னேற முடியும். வாழ்வில் ஒதுக்கப்படாத ஓர் அம்சம் உண்டெனில் அது திட்டமிடுதல் என்பதே ஆகும்.

திட்டமிட்டுவிட்டு வெறுமனே கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தால் திட்டம் பயனளிக்காது, ஏட்டிலும் எழுத்திலும் உள்ள திட்டம் செயலாக்கம் பெற்றால்தான் அது உரிய பயனை நல்கும்.

உளிபடாத கற்கள் சிலை ஆவதில்லை! கல்லுக்கு வலிக்குமே என்று உளி கவலைப்படுவதே இல்லை. அது போன்றே கடின உழைப்பு இல்லாத கனவு மெய்யாவது இல்லை.

எனவே, வெற்றியைக் குவிக்க சிந்தனை-செயல்திட்டம், கடின உழைப்பு ஆகிய இவை மூன்றும் மிக மிக அவசியம்.

**– பீமபெருமாள்.**

# தலித்தியம் என்றால் என்ன?



தலித்தியம் என்றால் என்ன?

தலித்தியம் என்றால் என்ன? என்பதற்கு அவர் அளித்துள்ள விளக்கம் மிகவும் முக்கியமானது. தோழர் திருமாவளவன் எழுதியுள்ள விளக்கத்தைப் பகுத்தும், சுருக்கியும் இங்கே நான் தொகுத்து அளிக்கிறேன்.

**இரா. ஜவகர், மார்க்சிய ஆய்வாளர், மூத்த பத்திரிகையாளர்.**

1. தலித்தியம் என்பது ஒரு கோட்பாடு, அதாவது தத்துவம்.

2. பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் நீட்சியே தலித்தியம், அதாவது தலித் மக்களின் விளிம்பு வரையில் நீட்டிக்கப்படும் பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் நீட்சியே தலித்தியம்.

3. சாதி ஒழிப்புக் கருத்தியலை முதன்மைப் படுத்துகிற தத்துவமே தலித்தியம்.

4. பிறப்பால் ஒரு தலித் பாட்டாளியின் தலைமையே, முழுமையான பாட்டாளி வர்க்கத் தலைமையாக அமையும் என்பதை உணர்த்துவதே தலித்தியம்.




5. அதே நேரத்தில் “பிறந்த சமூகப் பின்னணியைவிட உள்வாங்கிய தத்துவப் பின்னணியே முதன்மையானதாக இடம் பெறுகிறது“ என்பதையும் உணர்த்துவதே தலித்தியம்.

6. தலித்தியத் தலைமை மற்றும் தலித் நபர் தலைமை ஆகியவற்றை ஓர் அமைப்பு நிறுவுகிறபோது, விரிவடைந்த மற்றும் முழுமையடைந்த பாட்டாளி வர்க்கத் தலைமையாகவே அது பரிணமிக்கும் என்பதே தலித்தியம்.

7. சாதியால், மொழியால், மதத்தால், பாலினத்தால், இன்னபிற முரண்பாடுகளால் ஒடுக்கப்பட்டு, சிறுபான்மையினராகச் சிதறடிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்கான அரசியலே தலித்தியம்.

இவைதான் தலித்தியம் என்றால் என்ன என்பதற்குத் தோழர் திருமா தரும் விளக்கம்.

தலித்தியம் மட்டுமல்ல, இந்தியாவின் இன்றைய நிலைமை என்ன? இன்றைய நிலைமையை மாற்றி, அடைய வேண்டிய இறுதி இலக்கு என்ன? இலக்கை அடைவதற்குப் பொருத்தமான அமைப்பு என்ன? இலக்கை அடைவதற்கான வழி என்ன? வழியில் பயணப்படும்போது எழும் சிக்கல்கள் என்ன? அவற்றுக்கான தீர்வு என்ன? போன்ற பல அடிப் படையான கேள்விகளுக்குத் தோழர் திருமா விளக்கம் அளிக்கிறார்.

எடுத்துக்காட்டாக, அவரது விளக்கத்தின் சில பகுதிகளை மட்டும் இங்கே நான் சுருக்கி அளிக்கிறேன்.

1. இன்றைய நிலைமை:

இந்தியச் சமூகம் சாதிகளாகச் சிதறிக் கிடக்கிறது. சாதிகளைக் காக்கும் பணியை இந்து மதம் நிறைவேற்றி வருகிறது. குடும்பமும், சாதி, அரசு உள்ளிட்ட அனைத்திலும் சுரண்டும் வர்க்கமும், உழைக்கும் வர்க்கமும் அடங்கியுள்ளன. சாதி, மதம், வர்க்கம் கடந்த, அனைவருக்குமான சனநாயகமோ, அதிகாரமோ அனுமதிக்கப்படுவது இல்லை, ஒடுக்கு முறையே நிலவுகிறது.

2. மாற்றும், இறுதி இலக்கும்:

அனைவருக்கும் அதிகாரம், அனைவருக்கும் சனநாயகம், அனைவருக்கும் அடிப்படைத் தேவைகள் நிறைவு, அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் என்கிற சமத்துவச் சமூகமே மாற்று. இதுவே இறுதி இலக்கு.

3. இலக்கை அடைவதற்கு இன்றியமையாத தேவை அமைப்பு:

ஒரு தனி மனிதனோ, ஒரு குடும்பமோ, சமூகத்தில் எத்தகைய புரட்சிகர மாற்றத்தையும் உருவாக்க முடியாது. மக்களை ஒடுக்குகிற சாதி, மதம், அரசு ஆகிய அனைத்துமே அமைப்புகள்தாம். எனவே ஒடுக்குகிற அமைப்புகளை முறியடித்து வெல்வதற்கும் ஓர் அமைப்பு இன்றியமையாத தேவையாகும். கொள்கை சார்ந்த அரசியல் அமைப்பாகத் திரள்வதன் மூலம் புரட்சிகரமான மாற்றத்தைச் சமூகத்தில் உருவாக்க இயலும். கருத்தியல் வலிமையும் கட்டமைப்பு வலிமையும் கொண்ட மக்கள் திரளால் மட்டுமே பேராற்றலாகப் பரிணமிக்க முடியும். நமது கருத்தியல் அல்லது தத்துவம் என்பது தலித்தியமே.

அமைப்பின் உள்ளீடுகள் என்பவை எவை? பல்வேறு தளங்களில் அந்த அமைப்பு செய்ய வேண்டிய பணிகளக்கான களப்பணியார்கள், தளபதிகள் அலலது நிர்வாகிகள், நிர்வாகத்துக்கான சட்ட திட்டங்கள், அதிகாரப் பகிர்வு, சனநாயகம், பொரளாதாரம், நேர்மைதூய்மை, அனைத்தையும் வழி நடத்தும் கருத்தியல் தலைமைத்துவம் இன்ன பிற ஆகும். அமைப்பை வழி நடத்தும் தலைமைப் பாத்திரம் இன்றியமையாதது.

4. தலைமைப்பாத்திரம்:

தத்துவமும், தனிநபரும் இணைந்த ஆளுமை ஆற்றலே தலைமைப் பாத்திரம் ஆகும். தத்துவம் இல்லாத ஒரு தனிநபர்த் தலைமை மட்டும் தலைமைக்கான முழுமையை அடையாது. அதேபோல ஆளுமைப் பண்புகள் நிறைந்த நபர்த் தலைமை இல்லாத தத்தவமும் தலைமைக்கான முழுமையை அடையாது. தத்துவத்தின் ஆளுமையும் தனிநபர் ஆளுமையும் சமமான வலிமையும் பங்களுப்பும் கொண்டவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் தலைமைப் பாத்திரமானது முழுமையான ஆளுமையைப் பெற்றதாக அமைகிறது.

5. கூட்டுத்தலைமைத்துவம்:

கருத்தியலில் கூட்டுத்தலைமைத்துவம், நபர்களில் கூட்டுத் தலைமைத்துவம் ஆகிய இரண்டும் சேர்ந்ததே கூட்டுத் தலைமைத்துவம் ஆகும். பொருளாதாரம், சமூகம், பண்பாடு, அரசியல் ஆகியவற்றின் அடிப்படையில் உருப்பெறும் தத்துவங்களின் கலவையால் பெறும் ஆற்றலே கருத்தியல் கூட்டுத் தலைமை. தனிநபர் சார்ந்த ஒவ்வொரு தலைமையும் ஒருங்கிணைந்து செயல்படும் சூழலில் உருவாகும் தலைமைத்துவமே நபர் சார்ந்த கூட்டுத்தலைமை. இந்த இரண்டும் சேர்ந்ததே கூட்டுத் தலைமைத்துவம் ஆகும். இத்தகைய கூட்டுத் தலைமைத்துவப் பின்னணியோடு உருவாகும் தனிநபர்த் தலைமை மட்டுமே சனநாயகத் தலைமை யாக இயங்கிட இயலும். கூட்டுத் தலைமைத்துவப் பின்புலம் இல்லாத தனிநபர்த் தலைமை, சர்வாதிகாரப் போக்குகளில் சிக்குவதோ? இயக்கத்தின் போக்குகளையும் தடுமாற வைக்கும், திசைமாற வைக்கும்.

6. கூட்டமைப்புப் பொது நீரோட்டம்:


தேவைகளின் அடிப்படையில் பொதுவான இலக்கை எட்டுவதற்குரிய ஒருமித்த நோக்குள்ள அமைப்புகள், தேவையான தளங்களில் கூட்டுச் சேர்ந்து இயங்கும்போது கூட்டமைப்பாதல் நிகழும். தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் தனிமைப்பட்டுவிடக் கூடாது. பொது நீரோட்டம் அல்லது மைய நீரோட்டம் என்பது அதிகாரங்களின் குவிமையமாக இயங்குவதாகும். இதனுடன் இணைந்து இயங்குவதன் மூலம் அதிகாரத் தொடர்பை அல்லது அதிகாரப் பகிர்வைப் பெற இயலும். அதாவது, அமைப்பாதலும் கூட்டமைப் பாதலும்தான் அதிகாரங்களின் குவிமையமான பொது நீரோட்டத்துடன் இணைவதற்கும் வலுப்பெறுவதற்கும் வாய்ப்பை உருவாக்கும்.

7. இலக்கை அடையும் பாதை:

இலக்கை அடைவதற்கு உழைக்கும் வர்க்கம் அதிகாரத்தை வென்றிட வேண்டும். நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பெறலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்த நாடாளுமன்ற சனநாயகமோ ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கானது. எனினம் வரம்புக்கு உட்பட்டு அதிகாரப்பகிர்வை அனுமதிக்கக் கூடியது. அந்த அளவில் பயன்படுத்தத்தக்கது. எனினும் இறுதி இலக்கை அடைவதற்குப் போராட்டங்களின் ஊடாகவே பயணிக்க வேண்டும்.

இவ்வாறு அல்லது இந்தப் பொருளில் விரிவான விளக்கங்களைத் தோழர் திருமா அளித்திருக்கிறார்.

எழுச்சித் தமிழ்ர் திருமாவளவன் அவர்களின் அமைப்பாய்த் திரள்வோம் என்ற புத்தகத்திலிருந்து...



# மனிதநேயம்

மண்ணில் மனிதநேயம் மலரட்டும்
விண்ணில் மக்கள் உரிமை மீளட்டும்
தன்னிகரில்லா தமிழகம் தலைநிமிரட்டும்
எண்ணமில்லா தலைவன் இனி மாறட்டும்
இதயத்தில் வாழ்க என்று சொல்லட்டும்

வயதானவர் வாழ்த்த நிற்கட்டும்
நிமிர்ந்துநில் என்று சொல்லட்டும்
நிகரில்லா தமிழகத்தை உருவாக்கட்டும்
தமிழனின் தலைஎழுத்து இனிமாறட்டும்
தரணி போற்றும் தமிழகம் உருவாகட்டும்

மருத்துவத்தில் மகத்தான சேவை செய்யட்டும்
நோயில்லா தமிழகத்தை உருவாக்கட்டும்
உன்னதமான உயர்வினை கொடுக்கட்டும்
வரலாறு சார்ந்த கல்வியை கடைபிடிக்கட்டும்
கல்வியை வியாபாராமாக்கா நிலை வரட்டும்

கடமை தவறாத அலுவலரை நியமிக்கட்டும்
கண்ணியம் மாறாத ஆசிரியரைப் புகழட்டும்
கட்டுப்பாட்டுடன் வாழ வழி வகை செய்யட்டும்
குழந்தைத் தொழிலை இனிமேல் ஒழிக்கட்டும்
வரதட்சணைக் கொடுமை அறவே ஒழியட்டும்
வள்ளுவ நெறியில் வாழ்வீராக – வாழ்வாங்கு
இல்லறம் தழைக்கட்டும் தமிழ் மொழி ஓங்கட்டும்

**கவிஞர். க. இராமலிங்கம். எம்.ஏ.,**
சமூக ஆர்வலர்.
9840717967, 7395984676.

## வயிற்றைச் சுத்தமாக்கும் உணவுகள்

அஜீரணப்பிரச்சினை என்பது இன்னும் அதிக மான பேரை அவதிக்குள்ளாக்குகிறது. உண்ணும் உணவு ஒழுங்காக செரிக்காவிடில் உடல் நலம் பாதிக்கும் வயிற்றுவலி, புளித்த ஏப்பம் போன்றவை ஏற்பட்டு சிரமம் தரக்கூடும். எனவே வயிறு சுத்தம் என்பது அவசியம்.

பச்சைக்காய்கறிகள் வயிற்றைச் சுத்தமாக்கும். கீரைகள், செலரி, புரோக்கோலி, பீன்ஸ் போன்ற உணவுகள் எளிதில் ஜீரணமாகும். அதேபோல கேரட், வெங்காயம், பச்சைப்பட்டாணி போன்ற உயர்தர கார்போஹைட்ரேட் உணவுகள் வயிற்றுக்கு ஏற்றவை.

தானிய உணவுகள், கோதுமை ரொட்டி போன்றவை எளிதில் ஜீரணமாகும். தேவையற்ற கழிவுகள் வெளியேற உதவும். அதேபோல, நாள் தோறும் உண்ணும் உணவுகள் எளிதில் செரிப்பதற்கு நிறைய தண்ணீர் பருக வேண்டும். காலை உணவில் கறிவேப்பிலை துவையல் சேர்த்தால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு சீராகும்.

முருங்கைக்கீரையையும், கீழாநெல்லியையும் சம அளவில் சேர்த்து அரைத்து காலைமாலையில் நெல் லிக்காய் அளவு சாப்பிட்டால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். 'இன்சுலின்' இயல்பாகச் சுரக்க வழி செய்யும். கணையத்தையும் உள் உறுப்பு களையும் பாதுகாப்பாக வைத்திருக்கும்.

*— பீமபெருமாள்*



### ஜயந்த் மாம்மன் மாத்யூ

இந்திய பத்திரிக்கை அதிபர்கள் சங்கத்தின் (இந்தியன் நியூஸ் பேப்பர் சொசைட்டி) வருடாந்திர கூட்டம் பெங்களூ ருவில் நடைபெற்றது.

இதில் இந்த சங்கத்தின் 2018-2019-ம் ஆண்டுக்கான தலைவராக ஜயந்த் மாம்மன் மாத்யூ(மலையாள மனோரமா) தேர்ந்து எடுக்கப்பட்டார்.

மிட் டே பத்திரிக்கையின் ஷைலேஷ் குப்தா துணைத் தலைவராகவும், எல்.ஆதிமூலம்(ஹெல்த் அண்ட் ஆன்டி செப்டிக்) உதவித் தலைவராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

லாவ் சாக்சனா பொதுச்செயலாளராக நீடிக்கிறார்.



# திராவிடம்: தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியதா?

பெரியார், அண்ணா தலைமையிலான திராவிடர் கழகம், அமைப்பு வடிவில் 1944 இல் உருவானது. 1939 லிருந்து 1944 வரை நீதிக்கட்சியின் பெயரை தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (SILF) என்ற பெயர் அதற்கு இருந்தது.

திராவிடர் கழகத்தின் கொள்கைகளாக இலட்சியங்களாகப் பேசப்பட்டவை:

1. வேலை மற்றும் கல்வியில் நிலவிய பார்ப்பன ஏகபோக எதிர்ப்பு, 2. வகுப்புவாரி இட ஒதுக்கீடு, 3. சமூகத்தில் நிலவும் பார்ப்பனியக் கொள்கை எதிர்ப்பு வர்ண சாதி ஒழிப்பு, 4. கடவுள் மறுப்பு, 5. இந்து மத ஒழிப்பு, 6. இந்தித் திணிப்பு எதிர்ப்பு, 7. பெண் விடுதலை, 8. திராவிடர் என்ற இனக் கொள்கை, 9. திராவிட நாட்டு விடுதலை, 10. பொருளாதாரத்தில் ஒரு வகையான சமதர்மக் கொள்கை, 11. வடநாட்டு முதலாளிகள் எதிர்ப்பு.

இவற்றில் நீதிக்கட்சியின் கொள்கைகளாக இருந்து திராவிடர் கழகம் வரித்துக் கொண்டவை எவை? திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடிய திமுக இவற்றில் எத்தனை கொள்கைகளை இப்போது ஏற்றுச் செயல்படுகிறது? இவற்றிற்கான விடை தேவை!.

வேலை, கல்வி, அரசியல் ஆகியவற்றில் நிலவிய பார்ப்பன ஏகபோகத்தை நீதிக்கட்சி எதிர்த்தது. வகுப்புவாரி ஒதுக்கீட்டைக் கோரியது. அதற்கான முதல் ஆணையை (1921) வெளியிட்டது. ஆனால் நீதிக்கட்சி ஒருபோதும் சமூகத்தில் நிலவிய பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்க்கவில்லை. வர்ண சாதி ஒழிப்பைப் பேசவில்லை.

நீதிக்கட்சி "திராவிட இனம் திராவிட நாடு" என்ற கருத்தியல்களை ஏற்கவில்லை. அதிலிருந்த நடேசனார் மட்டும் தனிப்பட்ட கருத்தாகத் 'திராவிடர்' என்ற சொல்லைப் பேசி வந்தார். நாயர் சில சமயம் பேசியுள்ளார். அயோத்திதாசப் பண்டிதர் உட்பட எவ்வளவோ பேர் அப்போது வழக்கத்திலிருந்த 'திராவிடர்' என்ற பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், அவையெல்லாம் திட்டவட்டமான இனம் தாயகம் சார்ந்தவை அல்ல.

நீதிக்கட்சி ஒரு போதும் 'திராவிடர்' என்ற இன அடையாளம் பேசவில்லை. நீதிக்கட்சி வெளியிட்ட முதல் கொள்கை அறிக்கையின் பெயர் 'பிராமணரல்லாதார் கொள்கை அறிக்கை' அவ்வறிக்கையில் ஓர் இடத்தில் கூட 'திராவிடர்' என்ற சொல் வரவில்லை. திராவிட நாடு விடுதலை பற்றி நீதிக்கட்சி பேசவில்லை. இந்து மத ஒழிப்பு, கடவுள் மறுப்பு ஆகியவற்றை நீதிக்கட்சி ஏற்கவில்லை. இந்தித் திணிப்பையும் நீதிக் கட்சி எதிர்க்கவில்லை. பெண் விடுதலை, பொருளாதாரத்தில் சமதர்மம் என்பவை பற்றியும் நீதிக்கட்சி பேசவில்லை.

நீதிக்கட்சிக்கும் திராவிடர் கழகத்திற்கும் இருந்த 'கொள்கைத் தொடர்ச்சி' பற்றி அண்ணா கூறுவதைப் பார்ப்போம்.

"... திராவிடர் என்ற முழக்கத்தை மக்கள் மனத்திலே தமது கடைசி மூச்சு இருக்கும் வரை செய்து வந்தவர் டாக்டர் சி. நடேச முதலியார். அவர் தொடங்கிய அந்த அரிய இயக்கத்தினால் உண்டான வேகத்தை, உண்மையான விடுதலைக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல், அரண்மனைகளிலே வீற்றுக் கொண்டு அரசியலை நடத்தி வந்த சீமான்கள், பட்டம், பதவிகளுக்கு இந்த வேகத்தைப் பயன்படுத்திக் கொண்டதுடன் தங்களுடைய முழுத் திறமையும், காங்கிரசைக் குறைகூறவும், அதே நேரத்தில் பிரிட்டீசாருக்குத் துதி பாடவுமே உபயோகப்பட வேண்டுமென்று நோக்கம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே, திராவிடர் என்ற உரிமைச் சொல் திராவிட அரசு அமைக்கும் பரணியாகாமல் சர்க்கார் காரியாலயக் கதவைத் தட்டும் சுயநலச் சத்தமாகி விட்டது. டாக்டர் நடேச முதலியார் உள்ளம் உடைந்தே மாண்டார். இருந்தவரையில் அவர் திராவிடன் என்று பேசத் தவறியதில்லை.

"அந்த நாட்களிலே ஆங்கிலத்திலே SILF என்றும் ஜஸ்டிஸ் என்றும் மாளிகைகளில் வழங்கி வந்ததேயொழிய, மக்களின் முன்பு, திராவிடன் என்ற பெயரே வழங்கப்பட்டது".

அண்ணாவின் கூற்றுப்படி, 'திராவிடன்' என்பது நடேச முதலியாரால் மட்டும் அக்காலத்தில் உச்சரிக்கப் பட்டது. நீதிக்கட்சி அதை ஏற்கவில்லை, ஷிமிலிதி என்று தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின்

முதலெழுத்துச் சுருக்கம் மட்டுமே நீதிக்கட்சித் தலைவர்களிடையே பிரபலமாகப் பேசப்பட்டது. இதோ அண்ணா மேலும் பேசுகிறார்:

"அவர்கள் (நீதிக்கட்சித் தலைவர்கள்) தங்கள் ஆற்றலை எல்லாம் அரசியல் அதிகாரம் என்னும் மாயமானைப் பிடிக்கவே செலவிட்டனர். அதனால் அவர்கள் ஒவ்வொரு நகரிலும், பிரமுகர்களைச் சந்தித்தபோது, தேர்தலைப் பற்றிப் பேசி வந்தனரே தவிர, உத்தியோகத் துறையிலே ஐயர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறது அதை ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தனரேயொழியச் சமுதாயத்தில் படிந்து கிடந்த ஆரியத்தை அகற்ற, திராவிட உணர்ச்சியை ஊட்ட, பணிபுரியவில்லை".

"சமுதாயத் துறையிலே பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்துவது ஆபத்தல்ல, அரசியலில் ஆதிக்கம் பெற்றுள்ள பார்ப்பனர்களாலேயே நமக்கு ஆபத்து என்று வெளிப்படையாகவே அந்த நாள் தலைவர்கள் பேசி வந்தனர். தலைவர்களின் பேச்சு அவ்விதமிருந்தது. டாக்டர் நடேச முதலியார் போன்ற ஓரிருவர் தவிர!

"திராவிட இன உணர்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப் பட்ட முதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. சமுதாயத் தில் தலையிடுவதைத் தவறு என்று (தலைவர்கள்) எண்ணியதால், ஒரு இருபதாண்டுகள் மாயமான் வேட்டையில், மந்திரிப்பதவி அமைப்பதில், அதாவது சுயநல வேட்டைக்கு, அதன் விளைவாக, சதியா லோசனைகளுக்குச் செலவிடப்பட்டன. அந்தக் காலத்திலே, மாளிகைகள் சதியாலோசனை மண்ட பங்களாயின! ஆள் தூக்கிகள் அரசியல் சூத்திரதாரி களாயினர்! பதவி தேடுவோர், அரங்கமேறினர்! பரங்கிக்கு கொண்டாட்டம்! மக்கள் இந்தக் காரியம் தங்களுக்கல்ல என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டு கட்சியைக் கண்டிக்கத் தொடங்கினர். மாளிகைகளிலே சதிச் செயல்கள், கட்டுக்கடங்கா நிலை பெற்று, ஒரு தலைவர் இன்னொரு தலைவரை வீழ்த்துவதையே தொழிலாகக் கொண்டு, ஒருவருக் கொருவர் அடித்துக் கொண்டு, கும்பலாகச் சாய்ந்தனர்.

பெரியார் தலைமைக்கு வரும்வரை நீதிக்கட்சி இருந்த நிலை அதன் 'கொள்கை' ஆகியவற்றை அண்ணா தெளிவாக விண்டுரைத்து விட்டார்!

இவ்வாறு சீரழிந்து கிடந்த நீதிக்கட்சிக்குப் புத்துயிர் ஊட்டியது எது? திராவிட இன உணர்ச்சியா? இல்லையில்லை! திராவிட நாட்டுணர்ச்சியா? இல்லை யில்லை. தமிழ்மொழி உணர்ச்சி! தமிழ் இன உணர்ச்சி! தமிழ்நாட்டுணர்ச்சி! இதோ அதே சொற்பொழிவில் அண்ணா கூறுகிறார்:

"இந்தி எதிர்ப்புப் போராட்டம் தக்க சமயமாயிற்று. நாடு எங்கும் காங்கிரஸ் மீது கோபம் மட்டுமல்ல அந்த அளவு குறைவுதான் தமிழ்ப்பற்று, பரவிய காலம். எங்கும் சங்க நூற்களைப் படிக்க ஆரம்பித்த காலம். தமிழனுக்குத் தனியாக ஓர் மொழி உண்டு என்ற பெருமையைப் பேசலாயினர். ஐம்பெருங்காப்பியத்தைப் பற்றிய பேச்சு பொது மேடைக்கு வந்துவிட்டது! ஆர்வம் தமிழ் மீது அதிகமானதும், இடையே புராணீ கர்களும் புகுந்து கொண்டனர். ஆனால், அவர்களின் ஆதிக்கம் வளர முடியாதபடி தமிழ் ஆர்வம் கொண்டவர்கள், தமிழ்மொழி தாழ்வுற்ற காரண மென்ன, தமிழ்ப் பண்பு மறைந்த காரணம், தமிழ்ச் சிறப்பு தேய்ந்த காரணம் ஆகியவற்றை ஆராயத் தொடங்கினர். அந்த ஆராய்ச்சி, அவர்களை விட்ட இடத்தில் கொண்டு வந்து சேர்த்தது அதாவது டாக்டர் நடேச முதலியாரின் கல்லறைக்கு அருகே கொண்டு வந்து நிறுத்திற்று. பழைய நினைவுகள், பழைய பரணிகள் மீண்டும் உலவலாயின."

"தமிழ்மொழியைக் காப்பாற்ற ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்ற காட்சி தமிழரின் உள்ளத்திலே ஓர் புது உணர்ச்சியை உண்டாக்கி விட்டது".

*(27-08-1944 அன்று அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவு, பேரறிஞர் அண்ணாவின் சொற் பொழிவுகள் 1, பூம்புகார் பதிப்பகம் பக்கம் 117 - 120.)*

இந்தித் திணிப்பை எதிர்த்து மக்களிடம் எழுந்த தமிழ் மொழி உணர்ச்சியை தமிழ் இன உணர்ச்சியை திராவிட உணர்ச்சியாகத் திசை திருப்பியவர்கள் பெரியாரும் அண்ணாவும் ஆவர் என்ற உண்மையை யும் அண்ணாவின் பேச்சு வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அதேவேளை நீதிக்கட்சிக்கும் திராவிடக் கொள்கைக்கும் தொடர்பில்லை, தமிழ் இன உணர்ச்சி, இந்தி எதிர்ப்பு போன்றவற்றிற்கும் நீதிக்கட்சிக்கும் தொடர்பில்லை. சமூகத்தில் நிலவிய ஆரியம் பார்ப்பனியம் ஆகியவற்றையும் நீதிக்கட்சி எதிர்க்க வில்லை என்ற உண்மையையும் அண்ணாவின் பேச்சு தெரிவிக்கிறது.

சமதர்மப் பொருளாதாரம் என்பதைக் கனவில் கூட நினையாதவர்கள் நீதிக்கட்சி சீமான்கள். "ஏழைகள் உயர்வு பற்றிப் பேசினால் மேடையில் உட்கார்ந்திருக்கும் (நீதிக்கட்சி) தலைவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்" என்று வேறொரு உரையில் அண்ணா கூறினார்.


இந்த நீதிக்கட்சி எந்த வகையில் திராவிட இயக்கத் தின் மூதாதையாக, முன்னோராக இருந்தது?

*(திராவிடம்: தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியதா? என்ற புத்தகத்தில் திரு. பெ. மணியரசன்)*

# நாமக்கல் கவிஞர்

“தமிழன் என்றொர இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு“ என்று தொடங்கும் பாடல் ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் பட்டி தொட்டி களெங்கும் பாடப்பட்டு வந்த பாடல் ஆகும். நாமக்கல் கவிஞர் எழுதிய கதை 'மலைக்கள்ளன்' என்னும் பெயரில் திரைப்படமாக வெளி வந்த போது அந்தப் படத்தில் இடம் பெற்ற பாடல் அவரது பாடலாகும். குடியரசுத் தலைவரின் விருது பெற்ற முதல் தமிழ்ப் படம் என்னும் பெருமையும் இப்படத்திற்கு உரியது, நாமக்கல் கவிஞரின் கதைக்குத் திரைக்கதையும் உரையாடலும் கலைஞர் மு.கருணாநதி எழுதியுள் ளார். மற்ற எந்தப் படத்துக்கும் கிடைக்காத தனிச் சிறப்பை 'மலைக்கள்ளன்' பெற்றது. தமிழ் மட்டுமின்றி இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் இக்கதை படமாக்கப்பட்டது. 'மலைக்கள்ளன்' அனைத்து மொழிகளிலும் மகத்தான வெற்றி பெற்றது.

நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை என்று பின்னாளில் உலகறிந்த இந்தக் கவிஞர் 1888ஆம் ஆண்டு அக்டோபர் மாத் 19ஆம் தேதி கரூருக்கும் ஈரோட்டுக்கும் இடையே அமைந்துள்ள மோகனூர் என்ற ஊரில் பிறந்தார். அவ்வூர் போலீஸ் 'ஏட்டு' ஆக இருந்த வெங்கட்டராம பிள்ளை அம்மணி அம்மாள் தம்பதியினருக்கு ஏழு பெண் குழந்தைகளுக்குப் பிறகு எட்டாவது ஆண்ட குழந்தையாய்ப் பிறந்த ராமலிங்கம் தமது கவித்திறமையால் எட்டுத் திசையும் புகழும் பெருமை பெற்றார். தம் மகன் பெரிய படிப்பு படித்துப் பெரிய போலீஸ் அதிகாரியாக வரவேண்டும் எனத் தந்தை ஆசைப்பட்டார். ஆனால் ராமலிங்கம் பிள்ளைக்கு நாட்டமெல்லாம் தமிழ் இலக்கியத் திலேயே இருந்தது. தமது பத்தொன்பது வயதில் மெட்ரிகுலேசன் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் திரச்சி பிசப் ஹீபர் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ஓவியக்கலையில் நாட்டம் கொண்டு அதில் திறமையை வளர்த்துக் கொண்டார்.



இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஜார்ஜ் தமது முடிசூட்டுவிழாவை டெல்லியில் நடத்தியபோது அந்த மன்னரை இவர் வரைந்து அனுப்பிய ஓவியத்துக்காகத் தங்கப்பதக்கம் பெற்றார். டெல்லிக்கு அழைத்து அந்த மன்னரோடு அமர்ந்து விருந்து அருந்த அழைக்கப் பட்டுப் பாராட்டுப் பெற்றார். அரசரால் சிறப்புப் பெற்றவர் ஆங்கிலேய அரசை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தொடக் கத்தில் திலகருடைய தீவிரவாதக் கட்சியில் ஈடுபட் டார். பின்னர் காந்தியின் அணிக்கு மாறினார். காங்கிரஸ் கட்சியில் பல்வேறு முக்கியப் பொறுப்புக ளில் திறம்பட பணியாற்றினார்.

சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பியதும் காரைக்குடிக்கு அருகில் உள்ள கானாடு காத்தான் என்னும் ஊருக்கு வந்திருந்தார். அவரைப் பார்க்க ஆசைப்பட்ட நாமக்கல் கவிஞர் சென்றிருந்தார். அவரைப் பாரதியாருக்கு “இவர் நல்ல ஓவியர்“ என்று அறிமுகப்படுத்தினார்கள். பிள்ளைவாள்! நீர் நம்மை ஓவியம் தீட்டும். யாம் உம்மைப் பற்றிக் காவியம் தீட்டுவோம்“ என்று பாரதியார் கூறினாராம்.

இவர் பாடல்கள் இயற்றுவதிலும் ஈடுபாடு உடையவர் என்றதும் “ஏதாவது நீர் இயற்றிய பாடலைக் கூறும்.“ என்று பாரதியார் கேட்டுக் கொண்டாராம். ஆனால் மகாகவியின் முன் நமது பாடலா என்று நாமக்கல் கவிஞர் முதலில் தயங்கியுள்ளார். கூச்சம் எதற்கு? பாடும். என்று பாரதியார் தூண்டிய போதும் எந்தப் பாடலைக் கூறுவது எனத் தயங்கிய நாமக்கல் கவிஞர் கிட்டப்பா நாடகக் குழுவினரக்குத் தாம் எழுதிக் கொடுத்த பாடல் ஒன்றைக் கூறியுள்ளார். லங்காதகனம் என்னும் நாடகத்திற்காக எழுதப் பட்ட

பாடல்களுள் ஒன்று ராமனுடைய சோகத்தைக் கூறுவதாக அமைந்திருந்தது.

தம்மரசைப் பிறர் ஆளவிட்டு விட்டுத்தான் வணங்கிக் கைகட்டி நின்றபேரும்

என்று பாடலின் முதல் அடியைச் சொன்னவுடனே எழுந்து நின்று கைதட்டி பலே பாண்டியா! பலே! பலே! என்று ஆனந்தக்கூத்தாடினாராம் பாரதியார். அவ்வாறு பாரதியாரின் உள்ளம் கவர்ந்த நாமக்கல் கவிஞர் பாரதியாரின் வழிவந்த தேசியக்கவிஞர் என்று புகழ் பெற்றதில் வியப்பில்லை. தொடர்ந்து விடுதலை உணர்வைக் கிளர்ந்து எழச்செய்யும் பாடல்களைப் படைத்தார். பரிசுக்காகவோ, பாராட்டுக்காகவோ தமது கவிதைப் படைப்பில் அவர் சமரசம் 'செய்து கொள்ளவில்லை.

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்'

என்னும் பாடலை உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்களின் வழிநடைப் பாடலாகப் பாடிச் செல்வதற்கு இயற்றிக் கொடுத்தார். திருச்சிராப்பள்ளி யில் டாக்டர் ராஜன் வீட்டிலிருந்து ராஜாஜி தலைமையில் வேதாரண்யத்திற்குப் புறப்பட்ட சத்தியாக்கிரகப் போராளிகளின் ஊர்வலத்திற்கு இந்தப் பாடல் தான் வழி நடைப்பாட்டாக அமைந்தது. ராஜாஜி இந்தப் பாடலைப் பாராட்டி நாமக்கல் கவிஞருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். இந்தச் சமயத்தில் சுப்பிரமணிய பாரதியார் இல்லையே என்று நான் எண்ணினேன். அந்தக் குறையை நீங்கள் நீக்கி விட்டீர்கள் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். சத்தியாக்கிரகப் போர் முழக்கப் பாடலாக விளங்கிய இந்தப் பாட்டை ஒரு வாரப் பத்திரிகை லட்சக்கணக்கில் அச்சிட்டுத் தமிழ்நாடெங் கும் பரப்பியது. தமது பாடல்களாலும் நூல்களாலும் சொற்பொழிவுகளின் மூலமாகவும் நாட்டுப்பற்றை ஊட்டும் பணியில் அயராது ஈடுபட்டார். சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார். மக்கள் மனங்கவர்ந்த தேசியக்கவிஞராகப் புகழ் பெற்றார்.

1948ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நாகர்கோவில் காந்தியடிகள் நினைவாக நினைவுத்தூண் ஒன்று நிறுவி அதனை அந்நாளைய தமிழக முதல்அமைச்சர் குமாரசாமி ராசாவை கொண்டு திறக்கச் செய்தார். அன்று மாலை நிகழ்ச்சிக்கு நாமக்கல் கவிஞரைத் தலைமை வகிக்கச் செய்து அவரது தலைமையில் பேரறிஞர் அண்ணாவை சொற்பொழிவு ஆற்றச் செய்தார். அண்ணாவும் நாமக்கல் கவிஞரும் அன்றுதான் நேருக்கு நேர் சந்தித்துப் பேசினர். அப்போது மாற்றான் தோட்டத்து

**"நாமக்கல் கவிஞர் ஓர் அரிய கலைஞர், தலைசிறந்த தேசபக்தர், தேசத்துக்காகத் தியாகம் பல செய்தவர், சிறைவாசம் புரிந்தவர், ஒழுக்கத்தில் உயர்ந்தவர், ஆடு ராட்டே சுழன்று ஆடு ராட்டே என்று பாடித் தமிழ் நாட்டையே சுழன்று ஆடச் செய்தவர் என்று பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.**

மல்லிகைக்கும் மணமுண்டு என்று அண்ணா நாமக்கல் கவிஞருக்குப் புகழாரம் சூட்டினார்.

அவரது எழுத்தாற்றலையும் கவிதைச் சிறப்பையும் மனமாரப் பாராட்டி மகிழ்ந்தார். 1953ஆம் ஆண்டு சாகித்ய அகடமியின் நிர்வாகக்குழு உறுப்பினராக நியமனம் பெற்றார். சாகித்ய அகடமி என்னும் அமைப்பு இந்திய மொழிகளின் இலக்கியப் படைப் பாளிகளின் சார்பாளர்கள் கலந்து செயற்படும் இந்த அமைப்புக்கு ஜவகர்லால் நேரு தலைவராக அப்போது விளங்கினார். முதல் கூட்டத்தில் நாமக்கல் கவிஞரை நேருவுக்கு அறிமுகப்படுத்திய போது டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் தமது அறிமுகவுரையில் "நாமக்கல் கவிஞர் ஓர் அரிய கலைஞர், தலைசிறந்த தேசபக்தர், தேசத்துக்காகத் தியாகம் பல செய்தவர், சிறைவாசம் புரிந்தவர், ஒழுக்கத்தில் உயர்ந்தவர், ஆடு ராட்டே சுழன்று ஆடு ராட்டே என்று பாடித் தமிழ் நாட்டையே சுழன்று ஆடச் செய்தவர் என்று பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது.

1949ஆம் ஆண்டு தமிழக அரசு இவருக்கு அரசவைக் கவிஞர் எனும் பதவியை வழங்கிச் சிறப் பித்தது. தமிழக சட்ட மேலவை உறுப்பினராக இருமுறை இவர் நியமிக்கப்பட்டார் 1971 ல் இவருக்கு இந்திய அரசு பத்மபூசன் விருது வழங்கிச் சிறப்பளித்தது திரைப்படமாக வெளிவந்து புகழ்பெற்ற மலைக்கள்ளன் என்னும் நாவலைத் தவிர இவர் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இயற்றியுள்ளார்.

தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று முழங்கிய நாமக்கல் கவிஞர் 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24ஆம் தேதி காலமானார். தமிழ்நாட்டின் தலைநகரில் தமிழ்நாட்டு அரசின் தலைமைச் செயலகப் பத்து மாடிக் கட்டிடத்திற்கு இவரது பெயர் சூட்டி இவரைப் பெருமைப் படுத்தி யுள்ளது தமிழ்நாடு அரசு. இவர் வாழ்ந்த நாமக் கல்லிலுள்ள இல்லத்தை நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் ஆக்கியுள்ளது. இதில் நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சேலம் அருங் காட்சியகத்தில் நாமக்கல் கவிஞரின் வீர முழக்கத் திற்கேற்பத் தமிழ்நாடு சிறந்து விளங்கும் நிலையை உருவாக்குவதே அவருக்குச் செலுத்தும் நன்றிக்கடனாக விளங்கும்.

**பேராசிரியர் க. சுபத்திரா**



# சாதி?

பதினைந்தாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதப் பட்ட ஐந்திறம் இலக்கண நூலில் தமிழ்ச் சொற்களில் சாதி சமயம் இல்லை என்பது அறிஞர்களின் கருத்து.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்வியலில் சாதி சமயம் இல்லை.

பிறகு எழுதப்பட்ட சங்க கால நூல்களிலும் சாதி, சமயம் இல்லை. ஆனால், இயற்கை வழிபாடு இருந்தது. அது சமயம் என்ற அமைப்பாக இல்லை.

தமிழர் வாழ்வியலில் முதலில் இயற்கை வல்லமைகள் (ஐம்பெரும் பூதங்கள்) பிறகு ஊர்வன, பறப்பன, விலங்குகள் என்பன வழிபாட்டுக்கு உரியவைகளாக இருந்தன.

கி.பி. முதல் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐயன் வள்ளுவன், ஔவையார் காலத்தில் தந்தை, தாய் வழிபாடு. இதுவே பிற்பாடு குலதெய்வ வழிபாடானது.

கிறித்தவம் இயேசு கிறித்துவுக்குப் பிறகு அவரது சீடர் புனித தோமையார் கி.பி. 56ல் சேரநாடு வருகை (தமிழ்நாடு). அரசர்களுடைய ஆட்சி. இந்திய ஒன்றியம் உருவாகவில்லை. கிறித்தவம் விதைக்கப்பட்டது.

கி.பி. 3 மற்றும் 4 ஆம் நூற்றாண்டு பறையர், பள்ளர் ஆண்டனர் (தமிழர் உண்மை வரலாறு எழுதியவர் கேப்டன் கலியபெருமாள்) ஆரியரை, அரசாண்ட பரம்பரையினர் எதிர்த்த காரணத்தால், பொருளாதார தளத்தில் பறையரை ஒடுக்கி புறம் தள்ளினர்.

களப்பிரர் ஆட்சிக்காலம் ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டு. இலக்கியங்களுக்கான பொற்காலம்.

ஆரியர் ஊடுறுவல் தென் பகுதி பேரரசு மற்றும் சிற்றரசுகளில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் துவக்கம்.

கி.பி. 560 களில் முகம்மது நபியின் பிறப்பு கொள்கை பரப்புரை. சேர, பாண்டிய நாட்டு மரைக்காயர்கள் மூலமாக அப்பேரரசுகளில் இசுலாம் விதைக்கப்படுகிறது.

தமிழ் மன்னன் சேரன் சேரமான் பெருமாள் பாஸ்கர ரவிவர்மா. கொச்சிப் பகுதியில் முதல் பள்ளி வாசல் கட்டப்படுகிறது.

போர்த்துக்கீசிய மாலுமி கொலம்பசு கி.பி. 1492ல் அமெரிக்காவை (புதிய உலகம்) கண்டு பிடித்ததாக வரலாறு எழுதப்படுகிறது. ஆனால் தமிழர்களான மாயன்கள் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே மெக்சிகோ அமெரிக்காவில் வாழ்ந்து வந்தனர். ஆதாரம் 2012 டிசம்பரில் வெளிவந்த மாயன் நாட்காட்டி.

ஆரியர் ஊடுறுவல் பல்லவர், தெலுங்கர், மராட்டியர் படையெடுப்பு ஆட்சி.

கி.பி. 1526 முதல் இசுலாமியர் ஆட்சி.

கி.பி. 1600 ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றம். சேர நாட்டில் கால் பதித்தல்.

கி.பி 1830 வரை கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி. சில பேரரசுகள் பல சிற்றரசுகள் இங்கிலாந்து வசம்.

விக்டோரியா மகாராணியிடம் ஆட்சியை ஒப்படைத்தல்.

இந்து, இந்தியர், இந்தியா என அழைக்கப்படல் அதற்கு முன்னால் இந்து என்ற சொல் வரலாற்றில் இருந்தது இல்லை.

அரசியல் விடுதலை

1950. 520 க்கும் மேலான பேரரசுகள், சிற்றரசுகள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய ஒன்றியம் உருவாகுதல்.

இந்து மதம் 48 வெவ்வேறுபட்ட வழிபாட்டு முறைகளை (450 உட்பிரிவுகள்) உள்ளடக்கியது. இதில் 3 விழுக்காடு மக்களைக் கொண்ட பிராமணிய வர்ணாசிரமக் கொள்கை பிற 47 பிரிவு மக்களுக்கும் எவ்வாறு பொருந்தும்? பெரும்பான்மையினர் என்று எவ்வாறு சொல்ல முடியும்?

கிறித்தவர், இசுலாமியர், பௌத்தர், சமணர் இம்மண்ணின் மைந்தர்களே சிறுபான்மையினர் எவ்வாறு? இவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரையில் நடைபெறும் சடங்குகள் அனைத்தும் தாய் மொழியிலேயே நடைபெறுகிறது. இந்து மதத்தினர் சடங்குகள் அனைத்தும் தாய் மொழியில் அல்லாமல் சமற்கிருதத்தில் நடைபெறுகிறது. யார் தமிழர்?

எனது நாடு இந்திய யூனியன். தேசிய இனம் தமிழ் இனம்.

ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ பிறக்கிறான். ஆனால் பிறப்பு முதல் இறப்பு வரை தாழ்த்தப்பட்டவன், பிற்படுத்தப்பட்டவன், மிகவும் பிறப்டுத்தப்பட்டவன் என வாழ வேண்டுமா? சூத்திரன் எனும் பட்டத்தை ஏன் சுமக்க வேண்டும்?

இச்சமூக அமைப்பில் சாதிய அமைப்புகளும் பிற்போக்கத்தனங்களுடன் போராடித்தான் வாழ வேண்டுமா? சாதிய அமைப்புகளில் இருந்து விடுதலை கிடையாதா? அல்லது சாதிகள் இன்றி வாழ முடியாதா? சாதியில்லாமல் வாழ மனித வாழ்க்கைக்கு விமோசனம் இல்லையா?

சாதிகளைச் சார்ந்த மதங்களையும் மதங்களைச் சார்ந்த சாதிகளையும் புறக்கணித்து புதிய பாதையில் பயணிப்போம்...

***அ. பிரான்சிஸ் எம். ஏ., 94440 47152.***

## சபரிமலையில் பெண்களை அனுமதிக்க தந்திரிகள் ஏன் எதிர்க்கிறார்கள்?

‘இறைவனுக்கு முன்னே ஆணும் பெண்ணும் சமம் என்கிறபோது சபரிமலையில் மட்டும் பெண்கள் வழிபட அனுமதி மறுப்பது ஏன்?ஆலயத்தில் வழிபாடு செய்வது என்பது எல்லோருக்கும் உள்ள சட்ட உரிமை. பெண்கள் மட்டும் கோயிலுக்கு வரக்கூடாது என்று கூறுவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது. சபரிமலையில் பெண்கள் வழிபட உரிமை உள்ளது’ என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு கருத்து தெரிவித்திருக்கிறது. சபரிமலையில் ஏன் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை... இந்த வழக்கின் பின்னணி என்ன?

‘சபரிமலையில் நான் பிரம்மசாரியாகவே இருப்பேன். கலியுகம் முடியும் வேளையில் என் யோக நிஷ்டை கலையும். அப்போது உன்னை ஏற்றுக்கொள்வேன்’ என்று மகிஷிக்கு வாக்களித்தார் ஐயப்பன். அதன்படி அவருக்கு அருகிலேயே மாளிகைபுரத்து அம்மனாக தேவி இன்றும் வீற்றிருக்கிறாள். இங்கு ஐயப்பன் யோகநிலையில் இருப்பதாலேயே 10 வயதுக்கு மேற்பட்ட 50 வயதுக்குள்ளான பெண்கள் இங்கு அனுமதிக்கப்படுவதில்லை என்ற வழக்கம் உருவானது. மற்றபடி பெண்கள் வரக் கூடாது என்ற நியதி புராணரீதியாக எங்குமே சொல்லப்படவில்லை. சபரி பீடமும், மாளிகைபுரத்தம்மன் ஆலயமும் அங்கிருப்பதே சாட்சி. மேலும், சபரிமலையைத் தவிர தென்னிந்தியாவில் பல ஆலயங்களில் ஐயப்பன் – பூரணை, புஷ்கலை சமேதராக அருளுவதைக் கண்டிருக்கலாம்.

கடுமையான விரதங்கள் இருப்பதும், மலை மீது பயணிப்பதும் பெண்களுக்குச் சிரமமாக இருக்கும், மாதவிடாய் காலத்தில் விலங்குகளால் பெண்களுக்கு அதிக ஆபத்துகள் உண்டாகும் என்பது போன்ற காரணங்களால் ஒரு காலத்தில் பெண்கள் தவிர்க்கப்பட்டார்கள். பின்னர், அது கட்டாயமான நியதியாகவே மாறிவிட்டது என்பதே பலருடைய கருத்தாக இருக்கிறது. பெண் குழந்தைகளும், வயதான பெண்மணிகளும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதிலிருந்து பால்ரீதியாக பெண்கள் ஒதுக்கப்படுவதில்லை என்றும், பாதுகாப்புக்காகத்தான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. நெடுங்காலமாகவே, இளம் வயதுப் பெண்கள் சபரிமலை சந்நிதானத்துக்கு வருவதில்லை. 1949-ம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானம், இந்திய அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், சபரிமலை கோயிலின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, பெண்கள் சபரிமலைக்கு வரக்கூடாது என்ற விதி அதிகாரபூர்வமாக்கப்பட்டது.

எந்த விதிகள் எப்படி இருப்பினும் ஆணுக்குப் பெண் சமத்துவம் காணும் உலகில் பெண்களை கோயிலுக்கு அனுமதிப்பதே ஞாயமானதாகும்.



# வெஃகாமை!

திருக்குறளில் பதினெட்டாவது அதிகாரம் வெஃகாமை. வவ்வுதல் என்கிற சொல்லில் இருந்து வெஃகாமை என்பது வருகிறது. வவ்வுதல் என்றால் கவர்தல் என்று பொருள். தனக்கு உள்ள பொருளை, உரிய பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது வேறு. அடுத்தவன் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல் என்பது வேறு. இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது.

பொருளுக்கு ஆசைப்படக்கூடாது என்று வள்ளுவர் எங்கும் சொல்லவில்லை. 'செய்க பொருளை' என்றே கூறுகிறார். பொருள் வேண்டும். இந்த உலகத்தில் வாழ்கிறவரையில் நமக்குப் பொருள் வேண்டும். அந்தப் பொருள் அந்தச் செல்வம் நம்முடைய வியர்வையில் இருந்து வரவேண்டுமே தவிர, அடுத்தவனிடம் இருந்து, அவன் அறியாமல் கவர்ந்து கொள்கிற பொருளாக அது இருக்கக்கூடாது.

இங்கே வெஃகுதல் என்றால் அடுத்தவன் பொருளை அவன் அறியாமல் நடுவுநிலைமை பிறழ்ந்து கவர்ந்து கொள்ளுதல் என்று உரையாசிரியர்கள் பொருள் தருகின்றனர். அடுத்தவன் அறியாமல் கவர்ந்தால் திருட்டு என்கிறோம். நடுவுநிலைமை பிறழ்ந்து அடுத்தவன் பொருளைக் கவர்ந்து கொள்ளு தற்கு வெஃகுதல் என்று பொருள். அது கூடாது என்பதால் வெஃகாமை என்கிறார் வள்ளுவர்.

அறமன்றத்தில்கூட பொய்ச்சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தி இன்னொருவன் சொத்தை நாம் பெற்றுக் கொண்டால் அது வெஃகுதல்தான். எனவே, அறம்பிறழ்ந்து, நடுவுநிலைமை மீறி நாம் பெறுகிற பொருள் எல்லாம் வெஃகுதல் என்கிற அடிப்படையில் வரும்.

வெஃகாமை என்பது அறிவுடையோர் செய்யக் கூடிய செயல் அன்று. ஒருநாளும் அறிவுடையவர்கள் அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படமாட்டார்கள். வறுமையின் காரணமாக நாங்கள் தவறு செய்கிறோம் என்று பலரும் சொல்கிறார்கள். வள்ளுவர் சொல்கிறார்:

'புலம் வென்ற புன்மை இல் காட்சியவர்கள் இருக்கிறார்களே அவர்கள் 'இலம்' என்று வெஃகுதல் செய்யார்.

எங்களிடம் பணம் இல்லை. வாழ்க்கையில் வசதிகள் இல்லை. எனவே அடுத்தவன் பொருளை நடுவுநிலைமை இல்லாமல் கவர்ந்து கொண்டோம் என்று சொல்ல மாட்டார்கள். யார்? 'புலம் வென்ற புன்மை இல் காட்சியவர்'.

அதாவது நம் ஐம்புலன்களையும் வென்ற, அதாவது சரியான கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கிற அறிவாளிகள் அப்படி ஒருநாளும் சொல்ல மாட்டார்கள்.

அவ்வாறு சொல்கிறவர்களிடம் அறிவு இருந்து என்ன பயன் என்பது அடுத்த குறட்பாவிலே வள்ளுவர் கேட்கிற கேள்வி.

'அஃகி அகன்ற அறிவு என்னாம்' என்கிறார். அஃகுதல் என்றால் பொதுவான பொருள் சுருங்குதல் என்பதுதான். அதே நேரத்தில் கூர்மைப்படுதல் என்பதும் அஃகுதல்தான். கூர்மைப்பட வேண்டுமானால் சுருங்கித்தான் கூர்மைப்பட முடியும். அகன்று இருக்கிற நிலையிலே இருந்து சுருங்கி சுருங்கித்தான் கூர்மைப்பட முடியும். எனவே கூர்மைப்படுத்துதலும் அஃகுதல்தான்.

'அஃகி அகன்ற அறிவு' என்கிறார். அதாவது அகலமும் உண்டு. ஆழமும் உண்டு. நம்முடைய படிப்பு முறையைக் கூட நாம் எண்ணிப் பார்க்கலாம்.

தொடக்கத்தில் நாம் எல்லாப்பாடங்களையும் படிக்கிறோம். போகப்போக பாடங்களினுடைய அளவு குறைகிறது. ஆனால், பாடங்களினுடைய ஆழம் கூடுகிறது. எல்லாவற்றையும் படித்தவர்கள், பிறகு சில பாடங்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் படிக்கிறார்கள். பிறகு அந்தச் சில துறைகளிலும்கூட சில குறிப்பிட்ட பகுதிகளில் கூர்ந்து படித்து, அத்துறையின் வல்லுநர்கள் ஆகிறார்கள். இங்கே 'வேல்' என்பதை இதற்கான குறியீடு என்று சொல்லலாம். வேல் அகலமாக இருந்து கூர்மைப்படுகிறது. அதனாலேதான் அது எதிரிகளைக் கூர்ந்து தாக்குகிறது.


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுபக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுபக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/-
**(முழுபக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-
**(முழுபக்கம்)**


**அறிவு சிறந்ததெனினும், அது அறம் சார்ந்தும், மனிதநேயம் சார்ந்தும் விளங்கிட வேண்டும் என்பதில் வள்ளுவருக்குக் கூடுதல் கவனம் இருப்பதை நம்மால் உணர முடிகிறது.**

எனினும் அந்த அஃகி அகன்ற அறிவினால் என்ன பயன் என்று வள்ளுவர் கேட்கிறார்.

அறிவுடையார் எல்லாம் உடையார் என்று சொன்ன வள்ளுவர்தான் 'அறிவினால் ஆகுவ துண்டோ' என்றும் கேட்கிறார். அடுத்தவனுடைய துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக எவன் உணரவில்லையோ பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை' அவனுடைய அறிவினால் என்ன பயன் என்று கேட்கிறார்.

அறிவு சிறந்ததெனினும், அது அறம் சார்ந்தும், மனிதநேயம் சார்ந்தும் விளங்கிட வேண்டும் என்பதில் வள்ளுவருக்குக் கூடுதல் கவனம் இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

வெஃகாமை அதிகாரத்தில் இன்னும் சில அழுத்தமான செய்திகளையும் வள்ளுவர் தருகிறார்.

சுருங்குதல் எப்போதும் செல்வத்திற்கு இயல்பு. எவ்வளவு பணம் சேர்ந்தாலும் அதனுடைய இயல்பு என்னவென்றால் பெருகுதல் அல்ல சுருங்குதல்தான். செலவு செய்யச் செய்ய செல்வம் சுருங்கும்.

அஃகுதல் செல்வத்தின் இயல்பு. 'திறன் அறிந்து ஆங்கே திரு வந்து சேரும்' என்கிறார். நீ பணத்தை எப்படியாவது அடுத்தவனிடம் இருந்து கவர்ந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படாதே. தகுதி உடையவனாக இருந்தால், திறன் அறிந்து ஆங்கே 'திரு' வந்து சேரும்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல இறுதிக்குறட்பாவில் 'வேண்டாமை என்னும் செருக்கு' என்று சொல்கிறார். வேண்டாமை என்னும் செருக்கு எவனிடத்தில் இருக்கிறதோ, அவனிடத்தில் செல்வம் வந்து சேரும். பேராசை கொள்ளாமல் இருப்பது இருக்கிறதே அதுதான் இந்த உலகத்தின் பெருமிதம். வேண்டாமை என்னும் செருக்கு.


தொகுத்தவர்: **பீமபெருமாள்,**
அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம்.

# வந்தபின் திகைப்பது சிறப்பா?

தி.ஒய்ஸ்லின் சாமுவேல், பொறியியல் கல்லூரி மாணவர்



இன்றைய உலகில் நாம் பணத்தையே பெரும் மதிப்பாய் கொண்டு அதை சம்பாதிப்பதிலேயே நம்முடைய நேரத்தையும் கவனத்தையும் செலவு செய்கிறோம். பணத்துக்காக நம்மில் பெரும்பான்மையானோர் முன்பின் தெரியாதவருக்கோ தெரிந்தவருக்கோ அடிபணிந்து கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள் வேறு சிலர் தாமாகவே முயன்று சுயதொழில் செய்து உழைக்கிறார்கள்.

அதிகமாக மதிக்கப்பட்ட 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் கூட ஒரு காலத்தில் மதிப்பீட்டை இழந்து போனதை நாம் நன்கு அறிவோம். பணம் உருவாக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பணம் மனித வாழ்வாதாரத்துக்கு இன்றியமையாத ஒன்றாகவே இருந்து வருகிறது. ஆனால் அந்த பணத்தை நாடி செல்லும் நாம் அதைவிட மதிப்புமிக்க இயற்கையை அழிக்கலாகுமா?

இன்றைய காலக்கட்டத்தில் பல இடங்களில் நாம் வளர்ச்சி என்னும் பெயரில் இயற்கையை அழித்து வருகின்றோம். பணத்தை செலவு செய்து இயற்கையை காப்பாற்றுவதை நாம் அறிந்து இருக்கலாம். ஆனால் அத்தகைய பணத்தையே நஷ்டஈடாக கொடுத்து இயற்கையின் அருட்கொடையான மரங்களையும் மலைகளையும் காவு கொடுக்கும் காலம் வந்துவிட்டது. நஷ்ட ஈடு கொடுத்து இயற்கையை அழித்தாலும், நஷ்டம் இந்த உலகில் வாழும் அனைவருக்கும் தான்.

நெல்லை தென்காசி வழித்தடத்தில் நான்கு வழிச் சாலைக்காக வெட்டப்பட்டு கொண்டிருக்கும் மரங்களும், சென்னைசேலம் பசுமை வழிச் சாலைக்காக வெட்டப் பட இருக்கின்ற மரங்களுமே இதற்கு சான்று. இன்று நாம் வெட்டி வீழ்த்திவிட்டோம் என்று மகிழ்கின்ற மரத்தினால் பெறப்படும் பயனும், சுத்தமான காற்றும் கிடைக்காமல் போகும்போது நாம் அனைவரும் வெட்கி நாணுவோம்.

இன்றைய எந்திர உலகில் நிழலுக்கு கூட நிற்பதற்கு இடம் கிடையாது. இந்த உலகம் இன்னும் நம்மை விரைவாய் இயக்க முற்படுகிறதோ என்னவோ தெரியவில்லை? இயற்கையை அழிப்பது நமக்கே ஆபத்து என்பதை நாம் சிறிதும் உணராமல் வாழ்கிறோம் என்பது வேதனைக்குரிய ஒன்று.

இயற்கை தந்த மரங்களை அழித்து, இப்புவியை வெப்பம் ஆக்குவதால் காலமாற்றம் உண்டாகும் என்பதை நாம் அறிந்ததில்லையோ! எப்படியென்றால் மரத்தை அழிப்பதினால் பூமி வெப்பம் அடையும். பூமி வெப்பம் அடைவதினால் சீரற்ற அளவில் மழை பெய்யும். அதாவது ஒரு சில இடங்களில் தேவைக்கு அதிக மாகவும் மற்றும் ஒருசில இடங்களில் தேவைக்கு குறைவாகவும், வேறு சில இடங்களில் மழையே பெய்யாமலும் போகும். இது மனித இனத்துக்கு மட்டுமல்ல உயிருள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் ஆபத்தாக

அமையும். வளர்ச்சிக்காக மரங்களை வெட்டும் நாம், சுவாசிப்பதற்காக மரங்களை நடவும் வேண்டும். நம்முடைய வளர்ச்சி திட் பணிகளுக்காக கூடுமான வரை மரங்களை வெட்டாமல் இருப்பது நல்லது. உலகில் நாம் அனைவரும் சுயநலவாதிகள் தான். அரசியல் தொடங்கி ஆன்மீகம் வரை பெரும்பான்மை மனிதர்கள் சுயநலம் பேணுபவர்கள் தான்.

சுயநலமாக வாழும் நாம் மரங்களை வளர்ப்பது பேணுவது போன்ற செயல்களை பொதுநலம் என்றே கருதுகிறோம். ஆனால் அது தவறு. மரங்களை காத்த லும் சுயநலத்தை பேணுவதும் ஒன்றுதான். நாம் உதவி செய்ய இயலவில்லை என்றாலும் நம்முடைய சுய நலத்திற்காக பொதுநலத்தோடு மரங்களை காக்க உதவுகின்ற அனைவருக்கும் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

இந்த மண்ணின் வளத்தை அழித்து இந்த நாட்டின் செல்வத்தை சிதைப்பதினால் என்ன பயன்? நமக்கு நாமே மிகவும் பொறுமையாக கல்லறைகளை உருவாக்கிகொள்கிறோம். விதைப்பதற்கு செழிப்பான மண் இல்லாமல் விதைகள் மட்டும் முளைகட்டி என்ன பயன்?

அண்மையில் காவிரியின் குறுக்கே உள்ள கொள்ளிடத்தின் மதகு உடைந்து தண்ணீர் வீணானது. காவிரியில் இருந்து தண்ணீர் வருவதே சிரமமாய் இருந்த போதிலும், வந்த தண்ணீரையும் சிறப்பாய் சேமித்து பயன்படுத்த முடியவில்லையே என்பது தான் என்னை போன்ற சாமானியனின் வருத்தம்.

காவிரியில் தண்ணீரை வரச்செய்து வரலாற்று சிறப்புமிக்க சாதனையை செய்த தமிழக அரசு, நீர் வரும் முன்னே மதகுகளை சரிசெய்து இந்த சோதனையை தடுத்து இருக்க வேண்டாமா? அப்படிச் செய்திருந்தால், அதுவே மெச்சத்தகு சாதனையாக இருந்திருக்கும் அல்லவா?

இது கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்து அன்று. இது நாம் நீர்நிலைகளை கவனிக்காமல் சென்றதால் நிகழ்ந்த ஒரு வேதனை. நாம் நீர் நிலைகளுக்கு சேதம் வராமல் முன் அறிந்து காத்து பேணுதல் நன்று. தவறுகள் நடப்பது இயல்பு தான்.

அதே சமயம் நம்மால் பல தவறை தடுக்கவும் முடியும். எனவே வரும் முன்பே ஆராய்ந்து முயற்சி யினை எடுத்திருந்தால் பெரும் அளவில் நீர் வீணா காமல் நம்மால் தடுத்து இருக்க முடியும். பணத்தின் அவசியத்தை உணர்ந்த நாம், அதைவிட அத்தியா வசியமான இயற்கையின் தேவையை உணர்ந்தவர் களாய் இருத்தல் வேண்டும். இயற்கையை காத்து வாழ வேண்டும்.

வரும் முன் காப்பது சிறந்ததா? அல்லது வந்த பின் திகைப்பது சிறந்ததா? ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியது நம் கடமை.

●



**அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒரு பிரச்சினை தீர வழி தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தார். அவரது நண்பரிடம் பிரச்சனையைக் கூறியும் தீர்வு கிடைக்கவில்லை. ஆண்டவர் உம் பக்கம் இருப்பார். கலங்க வேண்டாம் என்று நண்பர் சொன்னார். ஆண்டவர் என் பக்கம் இருக்க வேண்டுமென்பதல்ல, நான் அவர் பக்கம் இருக்க வேண்டும். அதுவே என் விருப்பம் என்றார் லிங்கன்.**



**ஸ்டேட் பேங்க் அப் இந்தியாவின் முன்னாள் இயக்குநர் அருந்ததி பட்டாச்சார்யா, சென்ற ஆண்டில் 1300 கோடி ரூபாய்களை எடுத்த ரிலையன்ஸ் குழுமத்திற்கு கடனாக வழங்கினாராம். தன்னுடைய பதவிக்காலம் முடிந்த நிலையில், தற்போது ரிலையன்ஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநராக பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளாராம்.**

**தன்னுடைய பதவிக் காலத்தில் மக்களின் சேமிப்புகளை எல்லாம் தனியாருக்கு வாராக்கடனாக வாரிக் கொடுத்துவிட்டு, அதே கம்பெனியில் மிகப்பெரிய பதவி சுகத்தை அனுப விக்கிறாராம் அருந்ததி பட்டாச்சார்யா!**


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**




செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அக்டோபர் திங்கள் கூட்டம்,
சங்கத்தின் தலைவர் விசவனூர். வே. தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
துணைச்செயலாளர் திரு. மோகன் அவர்கள் உரையாற்றினார்.
அருகில் செயலாளர் சிங்காரச்சென்னை திரு. இரங்கநாதன், பொருளாளர் திரு. இமயவரம்பன்,
இணைச்செயலாளர் அறிவோசை திரு. மணிவண்ணன் அவர்கள்.






# மரக்கன்று நடும் விழா !

திண்டிவனம் தாகூர் பள்ளி மாணவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் தங்களது வகுப்பாசிரியர்களுடன் இந்திரா காந்தி ஜெயந்தி கல்லூரியில் மரக்கன்றுகளை நட்டனர். தலைமை ஆசிரியர் மேரிகிரிஸ்டி நூர் , வகுப்பாசிரியை ராஜலட்சுமி இவர்களுடன் மாணவர்கள் இனியவன் முகமது ,ஷம்கித், சண்முகப்பிரியன், கார்த்திக், சத்தீஷ்வரன், மற்றும் பலர் கலந்துக் கொண்டு மரக்கன்றுகளை நட்டனர்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

